இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

தின பூமி
thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





**மலேசியாவில் ஒத்திகையின் போது பயங்கரம்: ஹெலிகாப்டர்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் 10 பேர் உயிரிழப்பு**

...2-ம் பக்கம்

**கெஜ்ரிவால், கவிதாவின் நீதிமன்ற காவல் மே 7 வரை நீட்டிப்பு**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். தொடரில் 200 விக்கெட்கள் வீழ்த்திய முதல் வீரர்: புதிய சாதனை படைத்தார் ராஜஸ்தான் வீரர் சஹால்**

...7-ம் பக்கம்





● உலகப்புகழ் பெற்ற மதுரை சித்திரை திருவிழாவின் முத்தாய்ப்பு நிகழ்ச்சியான அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. அப்போது அழகர் பச்சை பட்டு உடுத்தி ஜொலிக்கும் தங்கக் குதிரை வாகனத்தில் காலை 6.02 மணியளவில் வைகை ஆற்றில் இறங்கினார். பச்சை பட்டு உடுத்தி இறங்கினால் நாடு செழிப்பாக இருக்கும் என்பது ஐதீகம்.

### குலுங்கியது மதுரை மாநகர்:

# பச்சைப் பட்டு உடுத்தி வைகை ஆற்றில் இறங்கினார் கள்ளழகர்

மதுரை, ஏப். 24-

சித்ரா பவுர்ணமியாம் நேற்று பச்சை பட்டு உடுத்தி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கினார். ஆற்றுப் பகுதியில் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் 'கோவிந்தா, கோவிந்தா, மாயவதாரா, அழகர்மலையானே' என உணர்ச்சிப் பெருக்கில் விண்ணதிர கோஷங்கள் எழுப்பினர்.

அழகர்கோவில் கள்ளழகர் கோயிலில் சித்திரைத் திருவிழா முதல் நாள் ஏப்.19ல் காப்பு கட்டுதல், திருவீதி உலாவுடன் தொடங்கியது. மூன்றாம் நாள் ஏப்.21-ம் தேதி மண்டூக முனிவருக்கு மோட்சம் அளிக்க சுந்தரராஜ பெருமாள், கள்ளழகர் வேடத்தில் கண்டாங்கி பட்டு உடுத்தி நேரிக்கம்புடன் தங்கப் பல்லக்கில் மதுரைக்கு புறப்பட்டார். அங்கு ராஜகோபுர வாசலிலுள்ள பதினெட்டாம்படி கருப்பணசாமியிடம் உத்தரவு பெற்று புறப்பட்டார்.

பின்னர் கோயில் கோட்டைவாசலை கடந்து பொய்கைக்கரைப்பட்டி, கள்ளந்திரி, அப்பன்திருப்பதி, சுந்தரராஜன்பட்டி, கடச்சனேந்தல் என வழிநெடுகிலுமுள்ள கிராமங்களில் மண்டகப்படிகளில் எழுந்தருளினார்.

நேற்று முன்தினம் (ஏப்.22) அதிகாலை 5.30 மணியளவில் மதுரை மாநகர எல்லையான மூன்றுமாவடியில் கள்ளழகருக்கு எதிர்சேவை நடந்தது. புதூர் மாரியம்மன் கோயில், ரிசர்வ்லைன் மாரியம்மன் கோயில் வழியாக அவுட்போஸ்ட், தல்லாகுளம் அம்பலகாரர் மண்டகப்படியில் நேற்று முன்தினம் மாலை எழுந்தருளினார்.

இரவு 8 மணிக்குமேல் தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் தங்கினார். பின்னர் இரவு 11.30 மணிக்கு மேல் திருமஞ்சனமாகி தங்கக்குதிரை வாகனத்தில் எழுந்தருளி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை சூடி அருள்பாலித்தார்.

நேற்று (ஏப்.23) அதிகாலை தல்லாகுளம் கருப்பணசாமி கோயிலுக்கும், பின்னர் தங்கக்குதிரை வாகனத்தில் ஆயிரம் பொன் சப்பரத்தில் அதிகாலை 3.30 மணியளவில் எழுந்தருளினார். அங்கிருந்து புறப்பட்டு வைகை ஆறு நோக்கி கள்ளழகர் புறப்பட்டார்.

இதற்கிடையில், வைகை ஆற்றில் கள்ளழகரை வரவேற்கும் வகையில் எழுத்தாணிக்காரத்தெரு வீரராகவப் பெருமாள் வெள்ளிக்குதிரையில் காலை 5.03 மணிக்கு வைகை ஆற்றிலுள்ள சந்திப்பு மண்டபத்தில் எழுந்தருளினார்.

பின்னர் முக்கிய நிகழ்வாக சித்ரா பவுர்ணமியில் கள்ளழகர் வைகை ஆற்றில் தங்கக்குதிரை வாகனத்தில் எழுந்தருள வைகை கரைக்கு அதிகாலை 5.51 மணிக்கு வருகை தந்தார். அங்கு கள்ளழகர் கோயில் சார்பில் பூமாலைகள், வெட்டிவேர் மாலைகள் கள்ளழகருக்கு சாற்றப்பட்டது.

கள்ளழகரைக்காண லட்சக்கணக்கான பக்தர்கள் வைகைக்கரையிலும், ஆற்றிலும் திரளாக காத்திருந்தனர். வீரராகவப்பெருமாள் வரவேற்க, பக்தர்கள் மனங்குளிர கள்ளழகர் பச்சை பட்டு உடுத்தி வைகை ஆற்றில் 6.02 மணிக்கு எழுந்தருளினார். பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா, மாயவதாரா, அழகர்மலையானே என உணர்ச்சிப்பெருக்கில் கோஷங்களை விண்ணதிர எழுப்பினர்.

இரவு முழுவதும் தூங்காமல் கண்விழித்து களைப்பில் இருந்த பக்தர்கள் கள்ளழகர் முகம் கண்டு மகிழ்ச்சியில், மகிழ்ச்சிப்பெருக்கில் ஆற்றுக்குள் ஆடிப்பாடி திளைத்தனர். அப்போது ஒலித்த வாராரு, வாராரு அழகர் வாராரு திரையிசைப் பாடலுக்கு பக்தர்கள் ஆட்டம் போட்டனர். பெண்கள், ஆண்கள் சர்க்கரை தீபம் ஏற்றி வழிபட்டனர்.

(கடைசி பக்கம் பார்க்க)

### பார்லி. தேர்தல்: கேரளா உள்ளிட்ட 13 மாநிலங்களில்

# 2-ம் கட்ட பிரசாரம் இன்றோடு நிறைவு

## வரும் 26-ம் தேதி வாக்குப்பதிவு

டெல்லி, ஏப். 24-

பாராளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான **2-ம் கட்ட பிரச்சாரம் இன்று மாலையுடன் ஓய்கிறது. 13** மாநிலங்களில் **89** தொகுதிகளில் வேட்பாளர்கள் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

**முதல்கட்ட தேர்தல்...**

18-வது பாராளுமன்ற மக்களவை தேர்தல் ஏப்ரல் 19-ம் தேதி தொடங்கி ஜூன 1-ம் தேதி வரை நடைபெறுகிறது. ஏப்ரல் 19-ந் தேதி தமிழ்நாடு, புதுவை உட்பட 21 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வாக்குப் பதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்றது.

பாராளுமன்ற மக்களவை தேர்தலின் 2-வது கட்டமாக 13 மாநிலங்களில் மொத்த 89 தொகுதிகளில் ஏப்ரல் 26-ல் வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

2-வது கட்டமாக கேரளா, கர்நாடகா உட்பட 13 மாநிலங்களின் 89 தொகுதிகளில் வரும் 26-ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. 89 தொகுதிகளிலும் இறுதி கட்ட பிரசாரம் உச்ச கட்டமாக நடைபெற்று வருகிறது. கேரளாவில் ஒரே கட்டமாக 20 தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

**2-ம் கட்ட தேர்தல்...**

அஸ்ஸாம்: 5 (மொத்தம் 14 தொகுதிகள்), பீகார்: 5 (மொத்தம் 40), சத்தீஸ்கர்: 3 (மொத்தம் 11), கர்நாடகா: 14 (மொத்தம் 28), கேரளா: மொத்தம் 20 இடங்கள், மத்திய பிரதேசம்: 7 (மொத்தம் 29), மகாராஷ்டிரா: 8 (மொத்தம் 48), மணிப்பூர்: 1 (மொத்தம் 2), ராஜஸ்தான்: 13 (மொத்தம் 25), திரிபுரா: 1 (மொத்தம் 2), உத்தரப் பிரதேசம்: 8 (மொத்தம் 80), மேற்கு வங்கம்: 3 (மொத்தம் 42), ஜம்மு மற்றும் காஷ்மீர்: 1 (மொத்தம் 5).

**89 தொகுதிகள் விவரம்...**

அஸ்ஸாம் - தர்ராங், உடல்குரி, திபு, கரீம்கஞ்ச், சில்சார், நாகோன். - பீகார் - கிஷன்கஞ்ச், கதிஹார், பூர்ணியா, பாகல்பூர், பாங்கா. சத்தீஸ்கர் - ராஜ்நந்த்கான், மகாசமுந்த், காங்கர். கர்நாடகா - உடுப்பி சிக்மகளூர், ஹாசன், தட்சிண கன்னடா, சித்ரதுர்கா, தும்கூர், மண்டியா, மைசூர், சாமராஜநகர், பெங்களூர் ரூரல், பெங்களூர் வடக்கு, மத்திய பெங்களூர், பெங்களூர் தெற்கு, சிக்கபள்ளாபூர், கோலார். மத்திய பிரதேசம் - திகம்கர், தாமோஹ், கஜுராஹோ, சத்னா, ரேவா, ஹோஷங்காபாத், பெதுல். மகாராஷ்டிரா - புல்தானா, அகோலா, அமராவதி, வர்தா, யாவத்மால் - வாஷிம், ஹிங்கோலி, நாந்தேட், பர்பானி. மணிப்பூர் - அவுட்டர் மணிப்பூர்.

**ராஜஸ்தான் - உ.பி...**

ராஜஸ்தான் -டோங்க்-சவாய் மாதோபூர், அஜ்மீர், பாலி, ஜோத்பூர், பார்மர், ஜலோர், உதய்பூர், பன்ஸ்வாரா, சித்தோர்கர், ராஜ்சமந்த், பில்வாரா, கோட்டா, ஜலவர்-பரான். திரிபுரா - திரிபுரா கிழக்கு. - உத்தரப்பிரதேசம் - அம்ரோஹா, மீரட், பாக்பத், காசியாபாத், புலந்த்ஷாஹர், கௌதம் புத்தா நகர், அலிகார், மதுரா. மேற்கு வங்காளம் - டார்ஜிலிங், ராய்கஞ்ச், பலூர்காட். ஜம்மு மற்றும் காஷ்மீர் - ஜம்மு, மற்றும் கேரளாவின் மொத்தம் உள்ள 20 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறும்.

**ராகுல் காந்தி...**

கேரளாவில் உள்ள வயநாடு தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ராகுல் காந்தி, இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் ஆனி ராஜா, திருவனந்தபுரம் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் சசிதரூர், பாரதிய ஜனதா கட்சி சார்பில் மத்திய மந்திரி ராஜீவ் சந்திரசேகர், திருச்சூர் தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் முன்னாள் ராஜ்யசபா எம்.பி. சுரேஷ் கோபி ஆகியோர் போட்டியிடுகின்றனர். இவர்கள் போட்டியிடுவதால் இந்த தொகுதிகள் நட்சத்திர தொகுதிகளாக மாறியுள்ளன.

இதனால் வயநாடு, திருவனந்தபுரம், திருச்சூர் ஆகிய 3 தொகுதிகளின் முடிவு அனைவராலும் மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### அதிகரித்த சர்க்கரை அளவு:

# அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் செலுத்தப்பட்டது

புதுடெல்லி, ஏப். 24-

அதிகரித்த சர்க்கரை அளவை அடுத்து சிறையில் இருக்கும் டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் செலுத்தப்பட்டது.

டெல்லி அரசின் கலால் கொள்கை தொடர்புடைய பணமோசடி வழக்கில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு திகார் சிறையிலடைக்கப்பட்டுள்ள டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், தனக்கு சிறையில் இன்சுலின் வழங்குவதில்லை என கடந்த வெள்ளியன்று (ஏப். 19) பகிரங்கமாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதன் காரணமாக தனக்கு ரத்தத்தில் சர்க்கரை அளவு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் கவலை தெரிவித்திருந்தார்.

டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு திகார் சிறை நிர்வாகம் இன்சுலின் வழங்கக் கோரி ஆம் ஆத்மி கட்சி சார்பில் ஞாயிற்றுக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. டைப் -2 நீரிழிவு நோயாளியான கெஜ்ரிவாலின் சர்க்கரை அளவு 320-ஆக அதிகரித்த பிறகுதான் இன்சுலின் அளிக்கப்பட்டதாக ஆம் ஆத்மி கட்சி வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இதனை அடுத்து 2 யூனிட்டுகள் இன்சுலின் ஊசி மூலம் கெஜ்ரிவாலுக்கு செலுத்தப்பட்டுள்ளது. டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் செலுத்தப்பட்டதை திகார் சிறை நிர்வாகமும் உறுதிப்படுத்தியுள்ளது.

### பறவைக் காய்ச்சல், அம்மை நோய் பாதிப்புகள்:

# அரசு மருத்துவமனைகளில் 3 லட்சம் மருந்துகள் இருப்பு

சென்னை, ஏப். 24-

கோடை காலத்தில் ஏற்படும் பறவைக் காய்ச்சல், அம்மை பாதிப்புகளுக்கு சிகிச்சையளிக்க அரசு மருத்துவமனைகளில் **3** லட்சம் மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

கோடைக்காலம் வந்தாலே வெயிலின் தாக்கத்தால் அம்மை, காலரா, பொன்னுக்கு வீங்கி உள்ளிட்ட பாதிப்புகள் உள்ளிட்ட வைரஸ் பாதிப்புகள் அதிகரிக்கும். அந்த வகையில் இந்தாண்டும் வைரஸின் பாதிப்புகள் அதிகரிக்க தொடங்கியுள்ளன. இந்நிலையில், கேரளா மாநிலத்தில் பரவி வரும் பறவைக் காய்ச்சலானது அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. H5N1 வகை வைரஸ் மூலம் ஏற்படும் அந்த பாதிப்பு மனிதர்களுக்கு பரவ வாய்ப்புள்ளது. இவை அனைத்துக்கும் ஓசல்டாமிவிர் உள்பட சில வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன. அவை போதிய எண்ணிக்கையில் இருப்பில் உள்ளதாக பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது., "ஆண்டுதோறும் கோடை காலத்தில் தட்டம்மை, சின்னம்மை பாதிப்புகள் அதிகரிப்பது வழக்கமான ஒன்றுதான். அதனைக் கட்டுப்படுத்தும் விதமாக அனைத்து மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3 லட்சத்துக்கும் அதிகமான வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர, காய்ச்சலுக்கு வழங்கப்படும் பாராசிட்டமால் மாத்திரைகளும் தேவையான அளவு உள்ளன. பாதிப்பு அதிகம் உள்ள இடங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் அனுப்பி வைக்கப்படும். ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு தொற்று பரவாமல் தடுப்பது எப்படி என்பது குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தடையில்லாமல் குடிநீர் வழங்குவது குறித்து தலைமைச் செயலாளர் ஆலோசனை

சென்னை, ஏப். 24-

தடையில்லாமல் குடிநீர் வழங்குவது தொடர்பாக தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா நேற்று **12** மாவட்ட கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சுட்டெரிக்கும் வெயில் கொளுத்தி வருவதால் குடிநீர் பயன்பாடு அதிகரித்து உள்ளது. வீடுகளுக்கு குழாய் மூலமும் லாரிகள் வழியாகவும் தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது.குழாய் மூலம் தண்ணீர் கொடுக்க முடியாத பகுதிகளில் குடிநீர் தொட்டிகளில் தண்ணீர் லாரிகள் மூலம் கொண்டு சென்று நிரப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கோடை கால குடிநீர் பற்றாக்குறையை சமாளிப்பது தொடர்பாக தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா தலைமையில் தலைமைச்செயலகத்தில் ஆலோசனை நடைபெற்று வருகிறது. ஆலோசனையில் 12 மாவட்ட கலெக்டர்கள் பங்கேற்றனர். கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையை சமாளித்து தடையின்றி குடிநீர் வினியோகிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்படும் எனத் தகவல் வெளியாகி உள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| ↑ 89.83 | ↑ 31.60 |
| பாயிண்ட் 73738.45 | பாயிண்ட் 22368 |



**தங்கம்**
1 சவரன் ₹ 53,600
1 கிராம் ₹ 6,700



**வெள்ளி**
1 கிலோ ₹ 86,500
1 கிராம் ₹ 86.50

**டாலர்** ₹ 83.30

**பெட்ரோல்** ₹ 101.57
**டீசல்** ₹ 93.18



### மலேசியாவில் ஒத்திகையின் போது பயங்கரம்:
# ஹெலிகாப்டர்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்தில் 10 பேர் உயிரிழப்பு

**கோலாலம்பூர், ஏப். 24-**

மலேசியாவில் ஒத்திகையின் போது இரண்டு ஹெலிகாப்டர்கள் மோதி ஏற்பட்ட விபத்தில் கடற்படை வீரர்கள் உள்பட 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மலேசியா நாட்டின் பேராக் அருகே லுமுட் எனும் பகுதியில் கடற்படைக்கு சொந்தமான இரண்டு ஹெலிகாப்டர்கள் நடுவானில் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் சிக்கி 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். பேராக் தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் இந்த சம்பவத்தை உறுதி செய்துள்ளனர். சம்பவ இடத்திலேயே 10 பேரும் உயிரிழந்ததை மருத்துவ அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மலேசிய கடற்படை தினத்தின் 90ம் ஆண்டு நிகழ்ச்சிக்காக நடந்த ஒத்திகையின்போது இந்த கோர விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரிகிறது. விபத்து தொடர்பான வீடியோ காட்சிகள் வெளியாகி வைரலாகி வருகிறது.

அதில், ஒரு ஹெலிகாப்டர் மற்றொரு ஹெலிகாப்டரின் வால் பகுதியில் நடுவானில் மோதுகிறது. இதையடுத்து, இரண்டு ஹெலிகாப்டர்களும் தரையில் விழுந்து நொறுங்கும் காட்சிகளும், ஹெலிகாப்டர்களின் துண்டுகள் காற்றில் பறக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

HOM (M503-3) மற்றும் Fennec (M502-6) ஆகிய இரண்டு ஹெலிகாப்டர்கள் மோதி விபத்துக்குள்ளானதாக தெரியவந்துள்ளது. இதில், HOM (M503-3) ஹெலிகாப்டரில் ஏழு பேரும், மற்றொரு ஹெலிகாப்டரில் 3 பேரும் பயணித்துள்ளதாக தெரிகிறது. உயிரிழந்தவர்களின் உடல்களை ஹெலிகாப்டர்களில் இருந்து மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மலேசிய கடற்படை தினத்தின் ஒத்திகை நிகழ்ச்சியின் போது, அந்நாட்டு கடற்படைக்கு சொந்தமான இரண்டு ஹெலிகாப்டர்கள் நடுவானில் மோதிக் கொண்ட விபத்தில் சிக்கி 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### சட்டவிரோதமாக நுழைந்தவர்களை
# நாடு கடத்தும் புதிய மசோதா இங்கிலாந்தில் நிறைவேற்றம்

**லண்டன், ஏப். 24-**

சட்டவிரோதமாக நுழைந்தவர்களை ருவாண்டாவுக்கு நாடு கடத்தும் புதிய மசோதா நிறைவேற்றம் இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இங்கிலாந்திற்கு சட்டவிரோதமாக புலம்பெயர்ந்து தஞ்சம் கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தஞ்சம் கோரி ஏராளமானோர் விண்ணப்பித்து காத்திருக்கிறார்கள். எனவே, சட்டவிரோதமாக வருபவர்களை தடுக்க இங்கிலாந்து அரசு முயற்சித்து வருகிறது. குறிப்பாக, சட்டவிரோதமாக நுழைபவர்களை ருவாண்டா நாட்டிற்கு நாடு கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

2022-ல் போரிஸ் ஜான்சன் பிரதமராக இருந்தபோது இதற்கான திட்டம் கொண்டு வரப்பட்டது. சட்டவிரோதமாக இங்கிலாந்துக்கு வரும் புலம்பெயர்ந்தோரை தடுக்கவும், ஆட்கடத்தலில் ஈடுபடுவோரின் வணிகத்தை முறியடிக்கவும் ருவாண்டா திட்டம் உருவாக்கப்பட்டது. அப்போதிருந்து இந்த விவகாரம் சர்ச்சையில் சிக்கியது. சட்டப் போராட்டங்களும் நடைபெற்றன.

இந்த கொள்கை சட்டவிரோதமானது என்று உச்ச நீதிமன்றம் கடந்த நவம்பர் மாதம் அறிவித்தது. ஏனென்றால் புலம்பெயர்ந்தோர் தங்கள் தாய்நாடுகளுக்கு அல்லது அவர்கள் தவறாக நடத்தப்படும் ஆபத்தில் இருக்கும் பிற நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படும் அபாயம் இருந்தது. உச்ச நீதிமன்றத்தில் இந்த விவகாரம் எழுப்பப்பட்டபோது, புலம்பெயர்ந்தோர் வேறு நாடுகளுக்கு அனுப்பப்படுவதை தடுக்கும் வகையில் ருவாண்டாவுடன் ரிஷி சுனக் புதிய ஒப்பந்தம் செய்தார்.

இந்நிலையில், புலம்பெயர்ந்தோரை ருவாண்டாவிற்கு நாடு கடத்துவதற்கான சட்ட மசோதா இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதையடுத்து புலம்பெயர்ந்தோரை ருவாண்டாவிற்கு விமானங்களில் அனுப்பும் நடவடிக்கையை தொடங்க உள்ளதாக பிரதமர் ரிஷி சுனக் கூறி உள்ளார். இந்த புதிய சட்டம், சிறிய படகுகளில் மக்கள் ஆங்கில கால்வாய் வழியாக நாட்டிற்குள் வருவதைத் தடுப்பதற்கான தனது உறுதிமொழியை நிறைவேற்ற உதவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். இந்த மசோதா இந்த வார இறுதியில் சட்டமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்னர், தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களை அரசு பிடித்து வைக்கத் தொடங்கும். இது, சட்ட போராட்டம் தீவிரமடைய வழிவகுக்கும்.

# சென்னை ரயில் நிலையத்தில் இளம்பெண் மர்ம மரணம்

**சென்னை, ஏப். 24-**

பரபரப்பாக காணப்படும் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இளம்பெண் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து தினந்தோறும் நூற்றுக்கணக்கான ரயில்கள் சென்று வருகின்றன. மேலும் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்வதால் 24 மணி நேரமும் போலீஸார் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் முதல் தளத்தில் உள்ள ஒரு அறையில் சுத்தம் செய்ய வந்த தூய்மைப் பணியாளர் ஒருவர் சுமார் 22 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் அமர்ந்தவாறு உயிரிழந்த நிலையில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அவர் உடனடியாக ரயில்வே போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார். இதுகுறித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த ரயில்வே போலீஸார், பெண்ணின் உடலை மீட்டு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் குறித்து ரயில்வே போலீஸார் வழக்குப் பதிவு செய்து அந்த பெண் யார் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். எப்போதும் பரபரப்பாக காணப்படும் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பெண் ஒருவர், உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### சுட்டெரிக்கும் கோடை வெயிலால்
# சென்னை ஏரிகளில் நீர் இருப்பு பாதியாக சரிவு

**சென்னை, ஏப். 24-**

கோடைகாலம் தொடங்கிய நிலையில், சென்னையில் முக்கிய குடிநீர் ஆதாரங்களில் நீர் இருப்பு 60 சதவீதமாக சரிந்துள்ளது.

கோடைகாலம் தொடங்கிவிட்ட நிலையில் சென்னையில் வழக்கத்தை விட வெப்பத்தின் தாக்கம் மிக அதிகமாக இருந்து வருகிறது. மேலும், மக்களின் குடிநீர் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் ஏரி, குளம் போன்ற குடிநீர் ஆதாரங்களில் தண்ணீர் இருப்பு வேகமாக சரிந்து வருகிறது.

இந்நிலையில், சென்னைக்கு முக்கிய குடிநீர் ஆதாரங்களான, செம்பரம்பாக்கம், பூண்டி, சோழவரம், புழல், கண்ணன்கோட்டை ஆகிய ஏரிகளின் நீர்இருப்பு, தற்போது 59.71 சதவீதம் நீர் மட்டுமே இருப்பில் உள்ளது. மேலும் நிலவரப்படி 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியில் 1,153 மில்லியன் கன அடியாக நீர் இருப்பு உள்ளது. இதையடுத்து, மாநகர மக்களின் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 288 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவான 200 மில்லியன் கன அடியில் தற்போது நீர் இருப்பு 187 மில்லியன் கன அடியாக உள்ளது.

இதில் குடிநீர் தேவைக்காக 208 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. மேலும், 3,645 கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது 2,455 மில்லியன் கன வரை நீர் இருப்பு உள்ளது. மக்களின் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 158 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. புழல் ஏரியின் மொத்த கொள்ளளவான 3,300 மில்லியன் கன அடியில் தற்போது இருப்பு 2,831 மில்லியன் கன அடியாக உள்ளது.

குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 186 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கண்ணன்கோட்டை ஏரியின் மொத்த கொள்ளளவான 500 மில்லியன் கன அடியில், தற்போது நீர் இருப்பு 396 மில்லியன் கன அடியாக உள்ளது.

தற்போது அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பாகவே, ஏரிகளின் நீர் இருப்பு 60 சதவீதம் வரை சரிந்த நிலையில் இனிவரும் காலங்களில் சென்னையின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியுமா என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது.

# இலங்கை: கார் பந்தய விபத்தில் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்வு

**கொழும்பு, ஏப். 24-**

இலங்கையின் ஊவா மாகாணத்தில் நடைபெற்ற கார் பந்தயத்தில் பங்கேற்ற கார் ஒன்று பார்வயாளர்களிடையே பாய்ந்ததில் 7 பேர் உயிரிழந்தனர்.

பொதுவாக, கார் பந்தயம் என்றாலே, சிறுவர்களிலிருந்து இளைஞர்கள் வரை அனைவரும் விரும்பக்கூடிய ஒன்று. கார் பந்தயத்தின் போது மிகவும் அதிகமான பாதுகாப்பு விதிமுறைகளும் பின்பற்றப்படும். விதிமுறைகளை மீறியும் சில மோசமான விபத்துகள் நடைபெற்று வருகிறது. அப்படியொரு சம்பவம்தான், இப்போது இலங்கையில் நடந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் ஃபாக்ஸ் கார் சூப்பர் கிராஸ் என்ற கார் பந்தயம் பரபரப்பாக நடைபெற்றது. இலங்கையில் உள்ள ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் தியத்தலாவ என்ற பகுதியில் இந்த கார் பந்தயம் நடந்தது. அந்த கார் பந்தயத்தைப் பார்க்க கிட்டத்தட்ட 45 ஆயிரம் பேர் கூடியிருந்தனர். அப்போதுதான் இந்த மோசமான விபத்து நடந்துள்ளது.

அந்தப் பந்தயத்தில் மின்னல் வேகத்தில் ட்ரேக்கில் சென்றுக் கொண்டிருந்த கார், திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து ட்ரேக்கைவிட்டு மக்கள் கூடியிருந்த கூட்டத்திற்குள் பாய்ந்தது. இதில் 8 வயது சிறுவன் உட்பட 6 பேர் நேற்று உயிரிழந்தனர். காயமடைந்த 20 பேருக்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்தார். இதனால், பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்தது. மேலும், தற்காலிகமாக இப்போது அந்த கார் பந்தயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் உடல்நிலையும் மோசமாகவுள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் என்றே அஞ்சப்படுகிறது.

### மீண்டும் நிலநடுக்கம்:
# தைவானில் அடுத்தடுத்து பல முறை அதிர்ந்ததால் பொதுமக்கள் அதிர்ச்சி

**தைபே, ஏப். 24-**

தைவானின் கிழக்குப் பகுதியான ஹுவாலினில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து பலமுறை நில அதிர்வு ஏற்பட்டது. இதனால் மக்கள் அச்சத்தில் வீதிகளில் தஞ்சமடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு ஏதும் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.

முன்னதாக, கடந்த 3 ஆம் தேதி தைவான் நாட்டின் தலைநகரான தைபேவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவானது. அது, தைவானில் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் எனக் கூறப்பட்டது. அதில் 14 பேர் பலியாயினர். அதற்கும் முன்னதாக தைவானில் 1999-ம் ஆண்டு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது 2,400 பேர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் 3-ல் ஏற்பட்டது தான் பெரிய நிலநடுக்கம் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அடுத்தடுத்து பல முறை நில அதிர்வு ஏற்பட்டது. சுமார் 180-க்கும் மேற்பட்ட முறை நில அதிர்வு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

தைவானில் இந்த வாரம் முழுவதும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஹுவாலின் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கடந்த 3 ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சேதமடைந்த இரண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் இன்றைய நிலநடுக்கத்தால் மேலும் சேதமடைந்து எந்நேரமும் இடிந்து விழலாம் என்ற நிலையில் உள்ளது. இதுபோல் பல கட்டிடங்களும் ஆபத்தான நிலையில் உள்ளதால் இவ்வாறாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தைவான் இரண்டு டெக்டானிக் தகடுகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளதால் அங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது இயல்பானதாகவே உள்ளது. தைவான் நாடு உலகின் மிகப்பெரிய எலக்ட்ரானிக் சிப் தயாரிக்கும் ஒப்பந்த நிறுவனமான தைவான் செமிகண்டக்டர் மேனுஃபாக்சரிங் கோ (TSMC) தொழிற்சாலையைக் கொண்டுள்ளது. நிலநடுக்கத்தால் இந்த நிறுவனத்தின் தொழிற்சாலை செயல்பாடுகள் சிறிது நேரம் தடைபட்டதாகவும் தற்போது இயல்பு நிலை திரும்பி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காதலியை கொன்ற வழக்கு:
# சிங்கப்பூரில் இந்திய வம்சாவளி நபருக்கு 20 ஆண்டுகள் சிறை

**சிங்கப்பூர், ஏப். 24-**

கள்ளக்காதலியை அடித்துக் கொன்ற வழக்கில் சிங்கப்பூரில் இந்திய வம்சாவளி நபருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் வசித்து வரும் இந்திய வம்சாவளி நபரான கிருஷ்ணன் (வயது 40), தனது மனைவிக்கு தெரியாமல் மல்லிகா பேகம் என்ற பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார். வீட்டிற்கே அழைத்து வந்து அந்த பெண்ணுடன் உல்லாசமாக இருந்துள்ளார். 2015-ம் ஆண்டு ஒருநாள் வீட்டின் படுக்கை அறையில் இருவரும் ஒன்றாக இருந்து மது அருந்தியபோது கையும் களவுமாக மனைவி பிடித்துள்ளார். கணவனை கடுமையாக திட்டியிருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த கிருஷ்ணன், மனைவியை அடித்துள்ளார். இதனால் பயந்துபோன மனைவி, மன்னிப்பு கேட்டதால் தாக்குதலில் இருந்து தப்பியிருக்கிறார். அதன்பின்னர், போலீசில் புகார் அளித்து தனக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனால் அவரை கிருஷ்ணன் தாக்கவில்லை. அதேசமயம், மல்லிகாவுடன் தொடர்ந்து குடும்பம் நடத்தியிருக்கிறார்.

இதற்கிடையே, மல்லிகாவுக்கு வேறு சில ஆண்களுடன் தொடர்பு ஏற்பட, அவர்களுடன் உல்லாசமாக இருந்துள்ளார். 2018-ல் கிருஷ்ணன் ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போதும் மல்லிகா வேறு ஆண்களுடன் நெருக்கமாக இருந்துள்ளார். இதனால் கிருஷ்ணனுக்கும், மல்லிகாவுக்கும் இடையே பிரச்சினை உருவானது. 2019ல் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

மல்லிகா தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டபோதும் ஆத்திரம் தணியாத கிருஷ்ணன், 2019-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 மற்றும் 16 ஆகிய இரண்டு நாட்கள் மல்லிகாவை அடித்து உதைத்து கடுமையாக தாக்கி உள்ளார். இதில் பலத்த காயமடைந்த மல்லிகா 17-ம் தேதி உயிரிழந்துள்ளார். இதையடுத்து கிருஷ்ணன், போலீசில் சரண் அடைந்துள்ளார். கைது செய்யப்பட்ட பிறகு, கிருஷ்ணனுக்கு மருத்துவ பரிசோதனை செய்ததில் அவருக்கு ஒருவித மனநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இந்த பாதிப்பு இருக்கும் நபர், சிறிய விஷயங்களுக்கும் தேவையற்ற டென்சன், கோபத்தின் உச்சிக்கு சென்று என்ன செய்வதென்றே தெரியாமல் கண்மூடித்தனமாக நடந்துகொள்வார். அப்படிப்பட்ட மனநிலை மற்றும் மது போதையில் இருந்த கிருஷ்ணன், மல்லிகாவை அடித்து துன்புறுத்தியது விசாரணையில் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட கிருஷ்ணன் மீது ஐகோர்ட்டில் கொலை வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில் கடந்த வாரம் தீர்ப்பு வழங்கிய ஐகோர்ட், கிருஷ்ணனை குற்றவாளி என அறிவித்தது. அவருக்கான தண்டனை விவரம் வெளியிடப்பட்டது. காதலியை அடித்துக் கொன்ற கிருஷ்ணனுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அவர் கைது செய்யப்பட்ட நாளில் இருந்து தண்டனைக் காலம் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

### கூவாகம் திருவிழா:
# மிஸ் திருநங்கை 2024 பட்டத்தை வென்ற ஈரோட்டை சேர்ந்த ரியா

**கூவாகம், ஏப். 24-**

கூவாகத்தில் கூத்தாண்டவர் கோயில் சித்திரை திருவிழாவையொட்டி மிஸ் கூவாகம் போட்டி நடந்தது. இதில் ஈரோட்டை சேர்ந்த உதவி மருத்துவரான ரியா மிஸ் கூவாகம் பட்டத்தை பெற்றார்.

மகாபாரதப் போரில் வெற்றி கிடைப்பதற்காக அரவான் என்ற இளவரசன், பஞ்ச பாண்டவர்களால் களபலி கொடுக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க புராண வரலாற்றை கூவாகம் திருவிழா நினைவுக் கூறுகிறது. உலகத்திலேயே திருநங்கைகளுக்கு என்றே தனியாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கூவாகம் கிராமத்தில் கூத்தாண்டவர் கோயில் அமைந்துள்ளது.

இங்கு ஆண்டுத்தோறும் சித்திரை மாதத்தில் திருநங்கைகள் ஒன்று கூடி விழா எடுத்து கொண்டாடி வருகின்றனர். அதன்படி இந்த ஆண்டு கூவாகம் கூத்தாண்டவர் கோயிலில் சித்திரை திருவிழா கடந்த 9-ம் தேதி சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கி நாள்தோறும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. இத்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான கோயில் பூசாரிகளிடம் திருநங்கைகள் தாலி கட்டி திருமணம் செய்து கொள்ளும் நிகழ்ச்சி இன்று மாலையும், அதனைத்தொடர்ந்து கூத்தாண்டவர் தேரோட்டமும், திருநங்கைகள் தாலி அறுக்கும் நிகழ்வும் நடைபெறுகிறது.

வரலாற்று சிறப்புமிக்க இத்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு மட்டுமின்றி பெங்களூரு, கேரளா, கர்நாடகா, டெல்லி, கொல்கத்தா, மும்பை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான திருநங்கைகள் விழுப்புரத்தில் குவிந்துள்ளனர்.

இந்நிலையில், திருநங்கைகளை உற்சாகப்படுத்தும் வகையில் தென்னிந்திய திருநங்கைகள் கூட்டமைப்பு சார்பில் மிஸ்கூவாகம் அழகி போட்டி விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகே யுள்ள நகராட்சி திடலில் நடைபெற்றது. இவ்விழாவில் நடைபெற்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் ஏராளமான திருங்கைகள் கலந்து கொண்டு திரைப்பட பாடல்களுக்கு ஏற்ப நடமாடியும் ரேம்ப் வாக்கில் நடந்தி தங்களது திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களை கவர்ந்தனர்.

இப்போட்டியின் இறுதியில் இந்த ஆண்டிற்கான மிஸ் கூவாகம் பட்டத்தை ஈரோட்டை சார்ந்த உதவி மருத்துவரான ரியாவும், தூத்துக்குடியை சார்ந்த நேகா இரண்டாம் இடத்தையும், சென்னையை சார்ந்த யுவான் ஜிலி ஜான் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். இதனைத் தொடர்ந்து வெற்றி பெற்ற திருநங்கைகளுக்கு கிரீடம் அணிவிக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. முதல் இடம் பிடித்தவருக்கு ரூ.50,000 இரண்டாம் இடம் பிடித்தவர்களுக்கு ரூ.25,000, மூன்றாம் இடம் பிடித்தவர்களுக்கு ரூ.11,000 வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பொன்முடி கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். திருநங்கைகளை குடும்பத்திலுள்ள தாய் தந்தையர்கள் ஆதரவளிக்க வேண்டுமெனவும், அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றகூடாது எனவும், அவர்களை ஆண் பெண்களுக்கு நிகராக பார்க்க வேண்டும் எனவும் முதல் இடம் பிடித்த ரியா வலியுறுத்தினார்.

# 5 நாள் பயணமாக சீனா சென்றார் நவாஸ் ஷெரீப்

**இஸ்லாமாபாத், ஏப். 24-**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவருமான நவாஸ் ஷெரீப் (வயது 74), ஐந்து நாள் பயணமாக சீனாவுக்கு புறப்பட்டு சென்றார். அவருடன் பேரன் ஜுனைத் சப்தார் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் இஷாக் தாரும் உடன் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த பயணம் தனிப்பட்ட பயணம் என்றும், இந்த பயணத்தின்போது நவாஸ் ஷெரீப்பிற்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மகள் மரியம் நவாஸ் முதல்-மந்திரியாக இருக்கும் பஞ்சாப் மாகாணத்தின் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான கூட்டங்களை நவாஸ் நடத்த உள்ளதாகவும், சீன நிறுவனங்களின் உரிமையாளர்களை சந்தித்து பேச உள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மருத்துவ காரணங்களுக்காக 2019ம் ஆண்டு லண்டன் சென்ற நவாஸ் ஷெரீப், 4 ஆண்டுகளாக அங்கு தங்கியிருந்தார். அதனை தொடர்ந்து கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நாடு திரும்பினார். அதன்பின்னர் முதல் வெளிநாட்டு பயணமாக சீனா சென்றுள்ளார்.

கடந்த காலங்களில் மருத்துவ காரணங்களுக்காக நவாஸ் ஷெரீப் சீனா சென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது

# ஐ.நா.,வில் இந்திய பெண் கீதாவுக்கு முக்கியப்பதவி

**வாஷிங்டன், ஏப். 24-**

இந்தோனேஷியாவில், ஐ.நா.,வின் ஒருங்கிணைப்பாளர் ஆக இந்தியாவைச் சேர்ந்த கீதா சபர்வால் என்பவர் நியமிக்கப்பட்டு உள்ளார். இதற்கான உத்தரவை ஐ.நா., பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் பிறப்பித்து உள்ளார்.

இந்த பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார். ஐ.நா.,வில் பருவநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி, நிர்வாகம் மற்றும் சமூக கொள்கை ஆகிய துறைகளில் 30 ஆண்டுகளாக பணியாற்றி உள்ளார்.

இந்தோனேஷியாவில் ஐ.நா.,வின் ஒருங்கிணைப்பாளர் ஆக கீதா சபர்வால் நியமிக்கப்படுவதற்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்து உள்ளது. இதற்கு முன்னர், கீதா சபர்வால் தாய்லாந்தில் ஐ.நா., ஒருங்கிணைப்பாளர் ஆகவும், இலங்கையில் அமைதி ஏற்படுத்துதல் மற்றும் வளர்ச்சிக்கான ஐ.நா.,வின் ஆலோசகர் ஆகவும் பணியாற்றி உள்ளார்.

### சட்டவிரோதமாக
# இங்கிலாந்தில் நுழைய முயன்ற 5 பேர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

**பாரிஸ், ஏப். 24-**

ஆப்பிரிக்கா, ஆசியா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் இங்கிலாந்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்து வருகின்றனர். இவர்களை தடுக்க இங்கிலாந்து அரசு முயற்சித்து வருகிறது. சட்டவிரோதமாக நுழைபவர்களை ருவாண்டா நாட்டிற்கு அனுப்பும் நடவடிக்கையிலும் இங்கிலாந்து அரசு ஈடுபட்டு வருகிறது.

பிரான்சில் இருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக இங்கிலாந்திற்குள் நுழைய முயன்ற 5 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். பிரான்ஸ் - இங்கிலாந்து இடையேயான கடல் பகுதியில் இங்கிலீஷ் சேனல் வழியாக இங்கிலாந்திற்குள் நுழைய அகதிகள் நுழைந்துள்ளனர். அப்போது, அவர்கள் பயணித்த படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், ஒரு குழந்தை உள்பட 5 அகதிகளும் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் வடக்கு பிரான்சின் விம்மரெக்ஸ் கடற்கரையில் கரை ஒதுங்கின. இதையடுத்து, உடல்களை கைப்பற்றிய பிரான்ஸ் போலீசார் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சமுதாயத்தை தழைக்க செய்யும் கொடை புத்தகங்கள்:

# உலக புத்தக தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, ஏப். 24-**

'புத்தகங்கள் மனிதச் சமுதாயத்தைத் தழைக்கச் செய்யும் கொடை' என உலக புத்தக தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

உலகெங்கிலும் உள்ள எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளை கௌரவிப்பதற்காக உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் ஏப்ரல் 23 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்நிலையில், புத்தக தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் ஒரு பதிவிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

"புதிய உலகத்திற்கான திறவுகோல் – அறிவின் ஊற்று – கல்விக்கான அடித்தளம் – சிந்தனைக்கான தூண்டுகோல் – மாற்றத்திற்கான கருவி – மக்களை உணர வழிகாட்டி என புத்தகங்கள் மனிதச் சமுதாயத்தைத் தழைக்கச் செய்யும் கொடை! புதிய உலகத்திற்கான திறவுகோல் – அறிவின் ஊற்று – கல்விக்கான அடித்தளம் – சிந்தனைக்கான தூண்டுகோல் – மாற்றத்திற்கான கருவி – மக்களை உணர வழிகாட்டி எனப் புத்தகங்கள் மனிதச் சமுதாயத்தைத் தழைக்கச் செய்யும் கொடை!

புத்தகங்களை வாசியுங்கள் – நேசியுங்கள்; பிறருக்குப் பரிசளித்து வாசிக்க... புத்தகங்களை வாசியுங்கள் – நேசியுங்கள்; பிறருக்குப் பரிசளித்து வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்! புத்தகங்களைப் பரிமாறிக் கொள்வதை ஓர் இயக்கம் என நான் தொடங்கியது முதல் பெறப்பெற்ற இரண்டரை லட்சம் புத்தகங்களுக்கும் மேல், பல மாணவர்களுக்கும் – நூலகங்களுக்கும் கொடையளித்துள்ளேன். கையில் புத்தகங்கள் தவழட்டும்! சிந்தனைகள் பெருகட்டும்! நல்வழி பிறக்கட்டும்!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 50 லட்சம் பார்வைகளை நெருங்கும் நடிகர் ரஜினிகாந்தின் கூலி பட டீசர்

**சென்னை, ஏப். 24-**

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் 'கூலி' திரைப்படத்தின் டீசர் வெளியான 17 மணி நேரத்தில் 47 லட்சம் பார்வைகளை கடந்துள்ளது.

ஜெயிலர் திரைப்படத்தை தொடர்ந்து த.செ.ஞானவேல் இயக்கத்திலான 'வேட்டையன்' திரைப்படத்தில் ரஜினிகாந்த் நடித்து வருகிறார். 'ஜெயிலர்' வெற்றியைத் தொடர்ந்து, சன் பிக்சர்ஸ் நிறுவனத்துடன் மீண்டும் ரஜினிகாந்த் 'தலைவர் 171' படத்துக்காக கைகோர்ப்பதாக அறிவிப்பு வெளியானது. இந்த படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்குவார் எனவும் அறிவிக்கப்பட்டது. ரசிகர்களிடையே ரஜினி – லோகேஷ் கூட்டணி குறித்து எதிர்பார்ப்புகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

தற்போது 'வேட்டையன்' பணிகள் நிறைவு கட்டத்தை எட்டியுள்ள சூழலில், தலைவர் 171 படத்துக்கான டைட்டில் டீசர் நேற்று முன்தினம் (ஏப். 22) மாலை வெளியிடப்பட்டது. அந்த டீசரில் படத்தின் டைட்டில் 'கூலி' என அறிவிக்கப்பட்டது. தங்கம் தொடர்பான வாட்ச் உள்ளிட்ட பொருட்களுடன் நிழலான தொழிலில் ஈடுபட்டிருக்கும் மர்ம கும்பல் மத்தியில் ரஜினிகாந்த் என்ட்ரி கொடுப்பதும், பஞ்ச் டயலாக்ஸ் மத்தியில் அடியாட்களை அதகளம் செய்வதும் டீசராக இடம்பெற்றுள்ளது.

இந்த டீசர் வெளியான ஒரிரு மணி நேரத்தில் 20 லட்சம் பார்வைகளை கடந்த நிலையில் தற்போது வரை 47 லட்சம் பார்வைகளை கடந்துள்ளதாக குறிப்பிடத்தக்கது.

# இந்து கடவுள்களை தொடர்ந்து காங்கிரஸ் கட்சி அவமதிக்கிறது

## ராஜஸ்தானில் பிரதமர் மோடி பேச்சு

**ஜெய்ப்பூர், ஏப். 24-**

ஹனுமன், ராமரை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து அவமதிக்கிறது என பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் டோங்கு மாவட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது, பாதுகாப்பான தேசம் மற்றும் வலுவான அரசின் முக்கியத்துவத்தை ராஜஸ்தான் மக்கள் அறிவார்கள். எனவே, நீங்கள் அனைவரும் 2014 மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடந்த லோக்சபா தேர்தலில், வலுவான பா.ஜ., ஆட்சி அமைக்க ஓட்டளித்தீர்கள். முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க காங்கிரஸ் முயற்சி செய்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சி வெற்றி பெற்றால், உங்கள் சொத்துகளை பறிமுதல் செய்து குறிப்பிட்ட நபர்களுக்கு கொடுத்து விடுவார்கள்.

முஸ்லிம்களுக்கு முதல் உரிமை என முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். நாட்டின் வளர்ச்சிக்கு நிலையான, நேர்மையான அரசு என்ன செய்ய முடியும் என்பதை கடந்த பத்து ஆண்டுகளில் அனைவரும் பார்த்திருக்கிறார்கள். ஹனுமன் மற்றும் ராமரை காங்கிரஸ் தொடர்ந்து அவமதிக்கிறது. ஒற்றுமையே ராஜஸ்தானின் மிகப்பெரிய பலம், இங்கு மக்களை பிளவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இரண்டு நாட்களுக்கு முன்பு காங்கிரசின் திருப்திபடுத்தும் அரசியலை அம்பலப்படுத்தினேன். காங்கிரஸ் ஆட்சியில் இருந்திருந்தால் பணவீக்கம் அறிவிக்கப்பட்டு கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். காங்கிரஸ் ஆட்சி காலத்தை விட பா.ஜ., ஆட்சியில் மாபியா, குற்றவாளிகள் மாநிலத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

பாராளுமன்ற தேர்தல் வெற்றிவாய்ப்பு எப்படி?

# 9 மாவட்டச் செயலாளர்களுடன் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை

**சென்னை, ஏப். 24-**

பாராளுமன்ற தேர்தல் வெற்றிவாய்ப்பு எப்படி? என்பது குறித்து 9 மாவட்டச் செயலாளர்களுடன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று ஆலோசனை நடத்தினார்.

அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

சென்னை மற்றும் புறநகர் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோருடன் தொகுதி பொறுப்பாளர்களுடனும் ஆலோசனை நடத்தினார். நடந்து முடிந்த பாராளுமன்ற மக்களவைத் தேர்தலில் தே.மு.தி.க. உடன் கூட்டணி அமைத்து அ.தி.மு.க. போட்டியிட்டது. இந்த நிலையில் மக்களவைத் தேர்தல் பணிகள் தொடர்பாக சென்னை மற்றும் புறநகரை சேர்ந்த 9 மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், இதுதவிர ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மற்றும் சென்னை தொகுதிகளின் வேட்பாளர்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தேர்தல் பணிகளில் ஏற்பட்ட பிரச்சினைகள், தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் ஒத்துழைப்பு எப்படி இருந்தது, வெற்றிவாய்ப்பு எப்படி என்பது தொடர்பாக அவர்களிடம் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இன்றும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்றும், இன்று சென்னைக்கு அருகில் உள்ள மாவட்டங்களில் வெற்றிவாய்ப்பு எப்படி உள்ளது என்றும் ஆலோசனை நடத்தப்படும் என்று அ.தி.மு.க. வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அருணாசல பிரதேசத்தில்

# 8 வாக்குச்சாவடிகளில் இன்று வாக்குப்பதிவு

**இடாநகர், ஏப். 24-**

அருணாசல பிரதேசத்தில் 8 வாக்குச்சாவடிகளில் நடந்த தேர்தலை செல்லாது என தேர்தல் கமிஷன் அறிவித்திருந்த நிலையில் இன்று அங்கு மறுவாக்குப்பதிவு நடக்கிறது.

அருணாசல பிரதேசத்தில் கடந்த 19-ந்தேதி நடந்த பாராளுமன்ற முதற்கட்ட தேர்தலுடன், சட்டசபைக்கும் வாக்குப்பதிவு நடந்தது. இதில் சில வாக்குச்சாவடிகளில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. மேலும் சில வாக்குச்சாவடிகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சேதமடைந்திருந்தன. இவ்வாறு 8 வாக்குச்சாவடிகளில் நடந்த தேர்தலை செல்லாது என தேர்தல் கமிஷன் அறிவித்து உள்ளது. அத்துடன் அந்த வாக்குச்சாவடிகளில் இன்று (புதன்கிழமை) காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மறுவாக்குப்பதிவு நடத்தப்படும் என அறிவித்து உள்ளது.

# அரவிந்த் கெஜ்ரிவால், கவிதாவின் கோர்ட் காவல் மேலும் நீட்டிப்பு

**புதுடெல்லி, ஏப். 24-**

டெல்லி முதல்வர் கெஜ்ரிவால், பிஆர்எஸ் கட்சி எம்.பி., கவிதாவின் நீதிமன்றக் காவல் மேலும் 14 நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

டெல்லி அரசின் மதுபானக் கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில், முதல்வர் கெஜ்ரிவால் மார்ச் 21ம் தேதி அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இதே வழக்கில் பிஆர்எஸ் கட்சி எம்.பி.,யும் தெலுங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர ராவின் மகளுமான கவிதாவையும் அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த மாதம் கைது செய்தனர்.

இருவரும் திகார் சிறையில், நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டு உள்ளனர். கெஜ்ரிவால் கைதுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன. கவிதாவின் ஜாமின் மனு மே 2ம் தேதி அன்று டெல்லி நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறது. இந்த வழக்கில் இருந்து விடுவிக்கக்கோரிய கெஜ்ரிவாலின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இந்நிலையில் கெஜ்ரிவால் மற்றும் கவிதா ஆகியோரின் நீதிமன்றக்காவல் மேலும் 14 நாட்கள் நீட்டிக்கப்பட்டு உள்ளது. மே 7 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அமலாக்கத்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

தேர்தலின்போது பணம் பறிமுதல்:

# அமலாக்கத்துறை பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப். 24-**

தேர்தலின்போது பணம் பறிமுதல் தொடர்பாக அமலாக்கத்துறை பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நேரத்தில் ரூ.3.99 கோடியை தேர்தல் பறக்கும் படையினர் தாம்பரம் ரெயில் நிலையத்தில் பறிமுதல் செய்தனர். இதேபோல நெல்லை தொகுதி ரூ.28.51 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. நெல்லை பா.ஜனதா மற்றும் காங்கிரஸ் வேட்பாளர்களின் ஆதரவாளர்களிடமிருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதால் அவர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்றும், இதுதொடர்பாக அமலாக்கத்துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று நெல்லை தொகுதி சுயேச்சை வேட்பாளரான சி.எம்.ராகவன், சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், சுந்தர் மோகன் ஆகியோர் கொண்ட பெஞ்சில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான சிறப்பு குற்றவியல் வக்கீல் என்.ரமேஷ், "தேர்தல் நேரத்தில் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சம்பவத்தை, சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றமாக கருத முடியாது. இருப்பினும் இதுதொடர்பாக அமலாக்கத்துறையின் விளக்கத்தை பெற்று தெரிவிக்க அவகாசம் அளிக்க வேண்டும்'' என்றார். இதையடுத்து நீதிபதிகள், இதுதொடர்பாக அமலாக்கத்துறை இன்றைக்குள் (புதன்கிழமை) பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தனர்.

# வட தமிழக உள் மாவட்டங்களுக்கு இன்றும் வெப்ப அலை எச்சரிக்கை

**சென்னை, ஏப். 24-**

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் 4 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும் வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து செவ்வாய் கிழமை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள அறிக்கை: தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது. அதிகபட்ச வெப்பநிலை: அதிகபட்ச வெப்பநிலை தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் அநேக இடங்களில் பொதுவாக இயல்பை விட 2 டிகிரி முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருந்தது. வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இயல்பை விட மிக அதிகமாக இருந்தது.

கடந்த 24 மணி நேரத்தில் ஈரோடு மாவட்டத்தில் வெப்ப அலை வீசியது. அதிகபட்ச வெப்பநிலை ஈரோட்டில் 43.0 டிகிரி செல்சியஸ், சேலத்தில் 41.6 டிகிரி செல்சியஸ், வேலூரில் 41.5 டிகிரி செல்சியஸ், தர்மபுரி மற்றும் கரூர் பரமத்தியில் 41.2 டிகிரி செல்சியஸ், திருத்தணி & திருப்பத்தூரில் 40.8 டிகிரி செல்சியஸ், மதுரை விமான நிலையத்தில் 40.7 டிகிரி செல்சியஸ், திருச்சியில் 40.3 டிகிரி செல்சியஸ், மதுரையில் (நகரம்) 40.2 டிகிரி செல்சியஸ், கோயம்புத்தூர் (விமான நிலையம்) மற்றும் நாமக்கல்லில் 40.0 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

தமிழக கடலோரப்பகுதிகள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் 35 டிகிரி – 39 டிகிரி செல்சியஸ் மற்றும் மலைப் பகுதிகளில் 23 டிகிரி –30 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

சென்னை மீனம்பாக்கத்தில் 37.3 டிகிரி செல்சியஸ் மற்றும் நுங்கம்பாக்கத்தில் 35.7 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. அடுத்த ஏழு தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை: குமரிக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

23.04.2024 முதல் 25.04.2024 வரை: தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். வட தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 26.04.2024 முதல் 29.04.2024 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

அடுத்த ஐந்து தினங்களுக்கான அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு: 27.04.2024 வரை: அதிகபட்ச வெப்பநிலை தமிழக உள் மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் இயல்பை விட 2 டிகிரி – 4 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு.

அதிகபட்ச வெப்பநிலை: வட தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் ஒருசில இடங்களில் 39 டிகிரி–41 டிகிரி செல்சியஸ், இதர தமிழக மாவட்டங்களின் சமவெளி பகுதிகள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் 36 டிகிரி–38 டிகிரி செல்சியஸ் இருக்கக்கூடும்.

ஈரப்பதம்: 23.04.2024 முதல் 27.04.2024 வரை: காற்றின் ஈரப்பதம் தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் பிற்பகலில் 30-50 % ஆகவும், மற்ற நேரங்களில் 40-75 % ஆகவும் மற்றும் கடலோரப்பகுதிகளில் 50-85 % ஆகவும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம்.

வெப்ப அலை பற்றிய முன்னெச்சரிக்கை: இன்று வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு: அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதுமில்லை.

# தங்கம் விலை பவுனுக்கு 1,160 ரூபாய் குறைந்தது

**சென்னை, ஏப். 24-**

சென்னையில் நேற்று (ஏப்ரல் 23) 22 காரட் ஆபரணத் தங்கம், பவுனுக்கு ரூ.1,160 குறைந்துள்ளது. ஒரு பவுன் ரூ. 53,600க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் ரூ.6,700க்கு விற்பனையானது.

கடந்த சில தினங்களாக தங்கம் விலை ஏற்றம் இறக்கத்தை கண்டு வருகிறது. அதன் படி, ஒவ்வொரு நாளும் தங்கம் விலை உயருமா? அல்லது இறங்குமா? என்ற கேள்வி எழுந்து வருகிறது. இந்நிலையில், சென்னையில் நேற்று முன்தினம் (ஏப்ரல் 23) 22 காரட் ஆபரணத் தங்கம், பவுனுக்கு ரூ.1,160 குறைந்துள்ளது.

ஒரு பவுன் ரூ. 53,600க்கு விற்பனையானது. ஒரு கிராம் ரூ.145 குறைந்து ரூ.6,700க்கு விற்பனையானது. ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1,160 குறைந்துள்ளதால், நகை பிரியர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.2.50 குறைந்து ஒரு கிராம் ரூ.86.50 ஆகவும், ஒரு கிலோ வெள்ளி ரூ.86,500 ஆகவும் விற்பனையானது.

# மோடி ஆட்சியில் சிறுபான்மையின மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை

## ஓ.பன்னீர்செல்வம் பேட்டி

**சென்னை, ஏப். 24-**

மோடி ஆட்சியில் சிறுபான்மையின மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் கடந்த 19-ம் தேதி முடிவடைந்த நிலையில், ராமநாதபுரம் மக்களவை தொகுதி வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது; ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் என்னுடைய வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ராமநாதபுரத்தில் உள்ள அனைத்து பிரிவு மக்களும் எனக்கு நல்ல வரவேற்பு அளித்தார்கள். 10 ஆண்டு கால பிரதமர் மோடியின் சிறப்பான ஆட்சியில் சிறுபான்மையின மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.'' இவ்வாறு அவர் கூறினார்.

சிறை தண்டனையை நிறுத்தி வைக்க முடியாது:

# முன்னாள் டி.ஜி.பி. ராஜேஷ் தாஸ் உடனே சரணடைய சென்னை ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப். 24-**

பாலியல் தொல்லை தொடர்பான வழக்கில், முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ் தாஸ் உடனே சரணடைய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021-ம் ஆண்டு பெண் எஸ்.பி.க்கு பாலியல் தொல்லை அளித்தது தொடர்பாக, முன்னாள் சிறப்பு டிஜிபி ராஜேஷ் தாஸ்க்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதித்து விழுப்புரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பை, விழுப்புரம் முதன்மை அமர்வு நீதிமன்றம் கடந்த பிப்ரவரி மாதம் 12-ம் தேதி உறுதி செய்தது.

இந்நிலையில், தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும், சரணடைவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் கோரி ராஜேஷ் தாஸ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதி எம்.தண்டபாணி முன்பு ஏப்ரல் 15-ம் தேதி விசாரணைக்கு வந்தது.

அப்போது, ராஜேஷ் தாஸ் தரப்பில், பல ஆண்டுகளாக காவல்துறைக்கு தலைமை பொறுப்பு வகித்த நிலையில், சிறைக்கு சென்றால் அது தனக்கு மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்தும் எனவும், சிறையில் அடைக்கப்பட்ட பிறகு மேல் முறையீட்டில் ஒருவேளை தான் விடுதலை செய்யப்பட்டால் என்ன ஆகும்? எனவும் வாதிடப்பட்டது.

இதனை கேட்ட நீதிபதி, முதலில் சரணடைந்து விட்டு பின்னர் ஜாமீன் கோரி மனுத்தாக்கல் செய்தால், அது குறித்து பரிசீலிக்கலாம் என கூறினார். பெண் அதிகாரிக்கு பாலியல் தொல்லை அளித்த வழக்கில் தண்டிக்கப்பட்ட நபருக்கு எப்படி சலுகை காட்ட முடியும்? எனவும் கேள்வி எழுப்பிய நீதிபதி, தண்டனையை நிறுத்தி வைக்க கோரும் மனு மீதான காவல்துறையின் நிலைப்பாடு என்ன? கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ், தண்டனையை நிறுத்தி வைக்கக் கூடாது எனவும் ராஜேஷ் தாஸ்க்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதாரங்கள் உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மனு குறித்து பதில் அளிக்க அவகாசம் வேண்டுமென கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, காவல்துறை பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தார்.

இந்நிலையில், நேற்று விசாரணைக்கு வந்த இந்த வழக்கில், 3 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைக்க முடியாது எனக் கூறி, இந்த வழக்கில் உடனடியாக அவர் சரணடைய வேண்டும் என்று சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

1 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும்

# மாணவர்களுக்கு இன்று முதல் கோடை விடுமுறை அறிவிப்பு

**சென்னை, ஏப். 24-**

1 முதல் 9-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இன்று (ஏப்.24) முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 10-ம் வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2, மாணவர்களுக்கு மார்ச் 1 முதல் ஏப்.8 வரை பொதுத் தேர்வு நடைபெற்று முடிந்தது. இதனைத் தொடர்ந்து 1-9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டு இறுதித் தேர்வு ஏப்.2 முதல் தொடங்கியது. இந்தத் தேர்வுகள் ஏப்.12 இல் முடிக்கப்பட்டு ஏப்.13 முதல் கோடை விடுமுறை அளிக்க பள்ளிக் கல்வித் துறை திட்டமிட்டிருந்தது.

இதனிடையே, 4-9 வகுப்பு மாணவர்களுக்கு ஏப்.10, 12 ஆகிய நாள்களில் நடைபெறவிருந்த தேர்வுகள் ரம்ஜான் பண்டிகை காரணமாக, ஏப்.22, 23 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

அந்த வகையில் இறுதித் தேர்வுகள் நேற்றுடன் நிறைவடையவுள்ளன. தொடர்ந்து மாணவர்களுக்கு இன்று (ஏப்.24) முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக கோடை விடுமுறை முடிந்து ஜூன் 1, அல்லது 2-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும். ஆனால் கடந்த ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் பள்ளிகள் தாமதமாக திறக்கப்பட்டது. அந்த வகையில் 6 முதல் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூன் 12-ஆம் தேதியும், 1 முதல் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூன் 14-ஆம் தேதியும் பள்ளிகள் திறக்கப்பட்டன.

இந்த நிலையில், வரும் நாட்களில் வெயிலின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும், ஜூன் 4-ஆம் தேதி மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது. அதன்பிறகே பள்ளிகள் திறப்பு இருக்கும் என பள்ளிக் கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ள வெப்பத் தணிப்பு செயல்திட்டத்தை உடனடியாக வெளியிட்டு, மக்கள் கருத்துகளைக் கேட்டு, முழுமையான ஒரு வெப்பத் தணிப்பு செயல்திட்டத்தை போர்க்கால அடிப்படையில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- அன்புமணி



வாக்குப்பதிவு சதவீத குளறுபடி, தேர்தல் ஆணையம் செயல்படுகிறதா என்ற கேள்வியை எழுப்புகிறது. என்னுடைய குடும்பத்திலேயே பலருக்கு ஓட்டு இல்லை. வெறுப்பு அரசியல், மத துவேச பேச்சு ஏற்றுக்கொள்ள முடியாதது. பிரதமரின் மத துவேச பேச்சுகளுக்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம். சசிகலா எழுதியதாக சொல்லப்படும் கடிதம், வெற்று கடிதம்.

- ஜெயக்குமார்



விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த துவரம்பருப்பு தானம் நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். மளிகைப் பொருட்களையும் நியாயவிலைக்கடைகள் மூலம் மானிய விலையில் வழங்க வேண்டும். குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் துவரம் பருப்பு மற்றும் பாமாயிலின் அளவை 2 கிலோவாக உயர்த்த வேண்டும்.

- ராமதாஸ்



முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. குடியுரிமை திருத்தச் சட்டம் யாருடைய குடியுரிமையையும் பறிக்காது. ஒவ்வொரு அகதிக்கும் குடியுரிமை கிடைக்கும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபட்டு, வெற்றி பெற எதிர்க்கட்சியினர் நினைக்கிறார்கள்.

- அமித்ஷா




• மதுரை வைகை ஆற்றில் நேற்று அழகர் பச்சை பட்டு உடுத்தி தங்க குதிரை வாகனத்தில் இறங்கினார். அப்போது பக்தர்கள் அவர் மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து தங்கள் பக்தியை வெளிப்படுத்தினார்கள்.

# திண்டுக்கல் அருகே குடகனாற்றில் மஞ்சள் பட்டு உடுத்தி குதிரை வாகனத்தில் அழகர் இறங்கினார் : ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு பரவசம்



**திண்டுக்கல் ஏப்ரல் :-24.**

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு ஸ்ரீ சௌந்தர ராஜா பெருமாள் கோவில் சித்திரை பௌர்ணமி திருவிழா வினை முன்னிட்டு குடகனாற்றில் மஞ்சள் பட்டு உடுத்தி குதிரை வாகனத்தில் அழகர் குடகனாற்றில் இறங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு சௌந்தரராஜா பெருமாள் திருக்கோயிலின் சித்ரா பௌர்ணமி திருவிழா வெகு விமரிசியாக தொடங்கி உள்ளது. நேற்று தாடிக்கொம்பு சௌந்தரராஜா பெருமாள் கோவிலில் குதிரை வாகனத்தில் தாடிக்கொம்பு மற்றும் கிராமப்புறங்களில் உலா வந்து பகவதி அம்மன் கோவிலில் இரவு தங்கினார். பின்னர் நேற்று காலை தாடிக்கொம்பில் உள்ள குடகானற்றில் தங்க குதிரை வாகனத்தில் மஞ்சள் பட்டு உடுத்தி சப்பரத்தில் பக்தர்கள் தங்களது தோளில் சுமந்து ஆற்றில் இறங்கும் எதிர் சேவை நடைபெற்றது.

ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் வெகு விமரிசியாக நடைபெற்றதால் ஏராளமான ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

50 ஆண்டுகளுக்கு பின்னர் 18-ஆம் படித்துறை தெரிந்து, இயற்கையான ஊற்று நீரில் அழகர் ஆற்றில் இறங்கியது மேலும் சிறப்பை கூட்டியது. பின்னர் ஆற்றை கடந்தவுடன் ஆற்றங்கரையில் உள்ள மண்டபத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். பின்னர் குதிரை வாகனத்திலிருந்து பல்லக்கில் எழுந்தருளி திண்டுக்கல் பிரதான சாலையில் அகரம், தாடிக்கொம்பு ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட மண்டபங்களில் எழுந்தருளினார். இதில் அப்பகுதி மக்கள் அழகருக்கு தேங்காய் பழம் நெய்வேத்தியம் வைத்து அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து திண்டுக்கல் தாடிக்கொம்பு ரோட்டில் உள்ள கருப்பண்ண சுவாமி கோவில் அபிராமி அம்மன் கோயில் கிழக்கு ரத வீதி அங்கு நகரம் உள்ளிட்ட பகுதிகளில் குதிரை, சேஷ, கருட வாகனத்தில் எழுந்தருளி ஒவ்வொரு பகுதியிலும் இரவு தங்கி 28ஆம் தேதி கருட வாகனத்தில் தாடிக்கொம்பு கோயிலுக்கு வந்தடைவார்.

அழகர் தங்கும் இடங்கள் அனைத்திலும் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# மதுரை மாவட்ட அரசுப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் துறையின் சார்பில் காய்கறி தோட்டங்கள் அமைப்பு



**திருமங்கலம்.ஏப்.24.**

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் வழிகாட்டுதலுக்கு இணங்க தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை சார்பில் சுற்றுச்சூழல் கல்வி திட்டம் 2023-24-ன் கீழ் மதுரை கல்வி மாவட்ட தேசிய பசுமைப்படை மற்றும் திருமங்கலம் கிரீன் டிரஸ்ட் மூலம் மதுரை மாவட்டம், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலை பள்ளி இளமனூர், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலை பள்ளி நாச்சிகுளம் மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி வேடர் புளியங்குளம் ஆகிய மூன்று பள்ளிகளில் காய்கறி தோட்டம் சிறப்பாக அமைக்கப்பட்டு அதன் துவக்க நிகழ்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கு வழங்கும் நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது நிகழ்ச்சிக்கு திருமங்கலம் கிரீன் டிரஸ்ட் நிர்வாக இயக்குனரும் மதுரை கல்வி மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப் பாளருமான எம்.எஸ்.பி.குழந்தை வேல் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் மேற்படி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் பரஞ்சோதி டேவிட், இந்து சேனன் மற்றும் உதவி தலைமையாசிரியை இந்துமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் மேற்படி பள்ளிகளின் தேசிய பசுமைப்படை ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்கள், தேசிய பசுமைப்படை மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இந்த காய்கறி தோட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை சார்பில் கத்தரி, தக்காளி, வெண்டை, அவரை, பூசணி, புடலை, சுரை, எலுமிச்சை, கருவேப்பிலை மற்றும் கீரை வகைகள் நாற்றுகள் மற்றும் விதைகள் மூலம் பயிரிடப்பட்டு மேற்படி பள்ளிகளின் தேசிய பசுமைப்படை மாணவ மாணவிகள் மூலமாக பராமரித்திடவும் விளைவிக்கும் காய்கறிகள் மற்றும் கீரைகள் சத்துணவு உள்ளிட்ட மாணவ மாணவிகளின் தேவைக்கு பயன்படுத்திடும் வகையில் மேற்படி பள்ளிகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது. மேலும் காய்கறி தோட்டத்திற்கு தேவையான மண்புழு உரம், விதைகள், பூவாளி போன்ற உபகரணங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரை கல்வி மாவட்ட தேசிய பசுமைப் படை ஒருங்கிணைப் பாளர் மற்றும் திருமங்கலம் கிரீன் டிரஸ்ட் நிர்வாக இயக்குநர் எம்.எஸ்.பி.குழந்தைவேல் சிறப்புடன் செய்திருந்தார்.



• பழநி இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் நடந்த சித்திரைத் திருவிழா தேரோட்டத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்

# திருமலைக்கேணியில் சித்ரா பவுர்ணமி விழா



**நத்தம், ஏப், 24**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சித்ரா பவுர்ணமி விழா நடந்தது. இதையொட்டி முருகப் பெருமானுக்கு பால், பழம், பன்னீர், புஷ்பம், இளநீர், விபூதி உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. ராஜாங்க திருக்கோலத்தில் முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கபட்டது.



• அருப்புக்கோட்டை ஆயிரம் கண் மாரியம்மன் கோவில் பங்குனி பொங்கல் கொடியேற்றத்தை முன்னிட்டு பொதுமக்கள் பால்குடம் எடுத்து அம்மனுக்கு அபிஷேகம் செய்தனர்.

# பரமக்குடி சித்திரை திருவிழாவில் சுந்தரராஜபெருமாள் அரக்குக் கலர் பட்டு உடுத்தி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கினார்



**பரமக்குடி.ஏப்.24.**

பரமக்குடி ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் கோவிலின் சித்திரைத் திருவிழா, கடந்த 18 -ம் தேதி காப்புக் கட்டுடன் தொடங்கியது.

திருவிழாவின் முக்கிய நிகழ்வான நேற்று வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பூப் பல்லக்கில் சுந்தரராஜப் பெருமாள் அரக்குக்கலர் பட்டுடுத்தி வெள்ளி கிண்ணத்தில் அவல் பாயசம் சாப்பிட்டு கள்ளழகர் திருக்கோலத்துடன் நூற்றுக்கணக்கான தீவட்டிகள் மற்றும் வான வேடிக்கைகளுடன் கோவிந்தா! கோவிந்தா! என்ற பக்தர்களின் கோஷங்களுக்கிடையேயும், கள்ளழகர் வர்ணிப்பு பாடலுடன் நேற்று அதிகாலை சரியாக 3.21 மணிக்கு வைகையாற்றில் இறங்கினார். கள்ளழகர் அரக்கு பட்டுத்தி வைகையாற்றில் இறங்கியதன் மூலம் இந்தாண்டு விவசாயம் செழிக்கும், பொன் ஆபரணம் விலை குறையும் என்பது ஐதீகம்.

இந்நிகழ்ச்சியினை இராமநாதபுரம்,சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு தரிசித்தனர்.தொடர்ந்து வைகையாற்றில் எழுந்தருளிய கள்ளழகர் பல்வேறு மண்டகப் படிகளுக்குச் சென்று பக்தர்களுக்கு காட்சியளித்தப் பின்பு,மேலச்சத்திரத்தில் அமைந்துள்ள தல்லாகுளம் மண்டகப்படியினை சென்றடைந்தார். அங்கு நேற்று காலை 10.15 மணிக்கு கோவிந்தா! கோவிந்தா! என்ற பக்தர்களின் கோஷங்களுக்கிடையே கள்ளழகர் கோலத்தில் குதிரை வாகனத்தில் எழுந்தருளி ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அதுசமயம், பக்தர்கள் விரதம் இருந்து மஞ்சள் நீர் பீச்சாங்குழல் துருத்தி மூலம் கள்ளழகர் மீது தண்ணீர் பீச்சி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

தொடர்ந்து பல்வேறு மண்டகப் படிகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்த பெருமாள், நேற்று இரவு வண்டியூர் என்னும் காக்காத் தோப்பு மண்டகப்படியினை சென்றடைந்தார். அங்கு பெருமாளுக்கு சந்தனக் காப்பு அலங்காரம் மற்றும் விசேச தீபாரதணைகள் நடந்தன.

முன்னதாக, வைகையாற்று பாலம் பகுதியில் இருந்து ஆயிரம் பொன் சப்பரம் என்னும் பெரிய தேரை நூற்றுக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து வந்து காக்காத் தோப்பு மண்டகப்படியில் சேர்த்தனர்.அங்கு விசேஷ தீபாரதணைகள் நடந்தன.தொடர்ந்து இன்று வைகையாற்றில் அமைந்துள்ள வாணிய உறவின் முறையார் மண்டகப் படியில் எழுந்தருளும் பெருமாளுக்கு விடிய விடிய தசாவதார காட்சிகள் நடக்கின்றன.

பின்பு பல்வேறு மண்டகப் படிகளில் பெருமாள் காட்சியளிக்கிறார்.

தொடர்ந்து 27ம்தேதி காலை பரமக்குடி ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் மீண்டும் கள்ளழகர் திருக்கோலத்துடன் வண்ண மலர்களால் அலங்கரிக்கப் பட்ட பூ பல்லக்கில் நகருக்குள் எழுந்தருளி வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார்.தொடர்ந்து அன்று மாலை கள்ளழகர் வர்ணிப்பு பாடல்களுடன் பெருமாள் கோவிலை சென்றடைகிறார். அன்று இரவு கண்ணாடி சேவை நடக்கிறது.திருவிழாவை முன்னிட்டு பரமக்குடி டி.எஸ்.பி.சபரிநாதன் தலைமையில் போலீசார்கள், ஊர்க் காவல் படையினர் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.இத்திருவிழா ஏற்பாடுகளை சுந்தரராஜ பெருமாள் கோயில் மேனேஜிங் டிரஸ்டி ரெங்காச்சாரி தலைமையில் நீலகண்டன், ரமேஷ்பாபு, கிரிதரன் ,கோவிந்தன் ஆகிய டிரஸ்டிகள் செய்து வருகின்றனர்.

# அருப்புக்கோட்டையில் இடிந்து விழுந்த கோயில் சுற்றுசுவர்

**அருப்புக்கோட்டை ஏப்.24.**

அருப்புக்கோட்டை சொக்கநாதர் கோயில் தெப்பத்தின் ஒரு பகுதி சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து கிடக்கிறது. தொப்பம் முழுவதும் சுகாதாரக் கேடாக உள்ளதாக பக்தர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட மீனாட்சி சொக்கநாதர் கோவில் உள்ளது. கோவிலுக்கு அருகே தெப்பக்குளம் உள்ளது.

இது ஒரு காலத்தில் சூரிய புஷ்கரணி என்னும் தீராத நோய் தீர்க்கும் குலமாக இருந்துள்ளது. தெப்பக்குளம் பராமரிப்பு இன்றி கழிவு நீர் சேரும் குளமாக மாறிவிட்டது. தெப்பத்தை சுற்றியுள்ள வீடு, கடைகளில் உள்ள கழிவுகள் தெப்பத்தில் விடப்படுகின்றன. தெப்பத்தை சுத்தமாகவும் மழை நீர் சேகரிக்க ச

கூடிய நடவடிக்கைகளை எடுப்பதில் கோயில் நிர்வாகம் அக்கறை காட்டவில்லை. தெப்பத்தை சுற்றி நடைபாதை அமைத்தும் சிசிடிவி கேமராக்கள் மின்விளக்குகள் பொருத்தப்பட்டு அழகுப்படுத்தப்படும் என நகராட்சி சார்பில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பூஜை செய்தார். அதைத்தொடர்ந்து தெப்பத்தை சுற்றி ஒரு பகுதியில் மட்டும் தடுப்பு கம்பிகள் அமைக்கப்பட்ட அத்துடன் பணி நிறுத்தப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்பு தெப்பத்தின் சுற்றுச்சூழல் ஒரு பகுதி இடிந்து விழுந்து விட்டது. தடுப்பு கம்பிகள் பெயர்ந்து விட்டது .விபத்து ஏற்படும் முன் சுற்று சுவரை கட்ட வேண்டும். தெப்பத்தில் கழிவு நீரை அகற்றி மழை நீர் வரும் வகையில் இந்து சமய அறநிலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிடப்பில் போடப்பட்ட பணிகளை நகராட்சி தொடர்ந்து நடத்தி பொது மக்களின் நலன் கருதி செயல்பட வேண்டும் என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்டவருக்கு 8 ஆண்டுகள் சிறை தண்டனை - அபராதம்

**திண்டுக்கல் ஏப்ரல்:-24**

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2023-ஆம் ஆண்டு சிறுமியை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி திருமணம் செய்து பாலியல் வன்புணர்வு செய்த தண்டல்காரன்பட்டியை சேர்ந்த சுகுமார் (35) என்பவரை போக்சோ வழக்கில் வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் சிறப்பு போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில்




நீதிபதி குற்றவாளி சுகுமார் என்பவருக்கு 8 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.3,500/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள்.



• கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக்கழக வளாகத்தில் ஸ்ரீ ஆனந்த விநாயகர், ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி கோவில்கள் சார்பில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற போது எடுத்த படம்.



திருவண்ணாமலை சித்ரா பவுர்ணமி முன்னிட்டு கிரிவல பாதை முழுவதும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், நெடுஞ்சாலைத்துறை மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் கலெக்டர் தெ.பாஸ்கர பாண்டியன் நேரில் சென்று ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.பிரியதர்ஷினி, கோட்ட பொறியாளர் ராஜ்குமார், உதவி கோட்ட பொறியாளர் அன்பரசு ஆகியோர் உள்ளனர்.



திருவண்ணாமலை காஞ்சி சாலை கிரிவல பாதையில் உலக பூமி தினத்தை முன்னிட்டு மரக்கன்று நடும் பணியினை கலெக்டர் தெ.பாஸ்கர பாண்டியன் மரக்கன்று நட்டு தொடங்கி வைத்தார். அருகில் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ராஜ்குமார், உதவி கோட்ட பொறியாளர் அன்பரசு, உதவி பொறியாளர் ஆ.கலைமணி ஆகியோர் உள்ளனர்.

## தி.மலை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில்
# முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி விரைவில் துவங்கப்படும்
## இணைப்பதிவாளர் எஸ்.பார்த்திபன் தகவல்

**திருவண்ணாமலை, ஏப்.24-**
திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் எஸ்.பார்த்திபன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் 2024-2025ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி தொடங்கப்படவுள்ளது.

நடப்பு கல்வி ஆண்டில் முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் மாணவர் சேர்க்கைக்கு இணையவழியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பயிற்சி வரும் செப்படம்பர் 2024 முதல் துவங்கி நடைபெறும் எனவும் பயிற்சி காலம் ஓராண்டு காலம் மற்றும் இரண்டு பருவ முறைகளில் பயிற்சி நடைபெறும். இப்பயிற்சிக்கான பாடத்திட்டம் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

முழு நேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியில் மாணவர்கள் சேர்வதற்கு வருகிற 29ந்தேதி முதல் திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் பதிவு செய்து கொள்ளப்படும். பயிற்சியில் சேர்வதற்கு விண்ணப்பிப்பதற்கான தேதி மற்றும் பயிற்சி கட்ட விவரங்கள் விரைவில் வெளியிடப்படும். பயிற்சியில் சேர்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விவரங்கள் இணையவழிய வெளியிடப்படும்.

இப்பயிற்சிக்கான குறைந்த பட்சகல்வி தகுதி பிளஸ்2 தேர்ச்சி ஆண், பெண் இருபாலரும் சேரலாம். இருபாலருக்கும் அதிகபட்ச வயது வரம்பு இல்லை. மேலும் விவரங்களுக்கு திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை திண்டிவனம் சாலை, கீழ்நாச்சிப்பட்டு, திருவண்ணாமலை என்ற மின்னஞ்சலிலோ, 04175-254793 என்ற எண் 9942011945 என்ற கைப்பேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சித்ரா பவுர்ணமியையொட்டி திருவண்ணாமலை வேட்டவலம் சாலையில் 10-வது ஆண்டாக அதிமுக தெற்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி சார்பில் அதன் மாவட்ட செயலாளர் டிஸ்கோ எஸ்.குணசேகரன் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி துவக்கி வைத்தார்.

## தி.மலை கிரிவலப் பாதையில் 1 லட்சம் பக்தர்களுக்கு அன்னதானம்:
## ஊராட்சி மன்ற தலைவர் கே.தருமராஜ் துவக்கி வைத்தார்

**திருவண்ணாமலை ஏப்.24-**
சித்ரா பவுர்ணமியையொட்டி திருவண்ணாமலையில் கிரிவலம் வந்த பக்தர்களில் 1லட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதை ஆணாய் பிறந்தான் ஊராட்சி மன்ற தலைவர் கே.தருமராஜ் நேற்று துவக்கி வைத்தார்.

திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமி நாளான நேற்று 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் 14 கி.மீ. தூரமுள்ள மலையை வலம் வந்து அண்ணாமலையாரை வழிபட்டனர்.

வருகைதந்த பக்தர்களுக்கு பல்வேறு அமைப்புகள் சார்பில் ஆங்காங்கே அன்னதானம் வழங்கப்பட்டன.



ஆணாய் பிறந்தான் ஊராட்சிக்குட்பட்ட கிரிவலப் பாதையில் ஸ்ரீஅண்ணாமலையார் ஸ்ரீஉண்ணாமலையம்மன் அன்னதான அறக்கட்டளை சார்பில் மகா அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவண்ணாமலை நகராட்சி 25வது வார்டு உறுப்பினர் ஸ்ரீதேவிபழனி தலைமையில் குழுவின் தலைவரும், ஆணாய்பிறந்தான் ஊராட்சி மன்ற தலைவர் கே.தர்மராஜ் அறக்கட்டளை தலைவர் சுமதி தருமராஜ் ஆகியோர் அன்னதானம் வழங்குவதை துவக்கி வைத்தனர்.

காலை 6 மணி முதல் இரவு வரை தொடர்ந்து சாம்பார், ரசம், மோர் மற்றும் கூட்டு, பொரியலுடன் 1 லட்சம் பக்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

இதில் கௌரவ தலைவர்கள் ஜி.பழனி பிரசன்னா செயலாளர் ஏ.எஸ்.கருணாநிதி பொருளாளர் கே.நாராயணசாமி துணை தலைவர் ஆர்.விஜயகுமார் துணை செயலாளர் எம்.கார்த்திகேயன் மற்றும் ரமணா ப.கிஷோர், பாஸ்கரன், அறக்கட்டளை உறுப்பினர்கள் கிருஷ்ணகிரி அண்ணாமலையார் அன்னதான சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஆரணி தர்ம ராஜா கோவில் அக்னி வசந்த விழாவை முன்னிட்டு ராஜசுய யாக வேள்வி



**ஆரணி ஏப் 24:**
ஆரணி கொசப்பாளையம் தருமராஜா கோவிலில் நடைபெறும் அக்னி வசந்த விழா முன்னிட்டு ராஜசுய யாக வேள்வி நடைபெற்றது.

ஆரணி கொசப்பாளையம் தருமராஜா கோவிலில் மகாபாரதம் சொற்பொழிவு நிகழ்ச்சி கடந்த மார்ச் 23 அன்று தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வரும் மே5ம் தேதி படுகளம், தீமிதி திரு விழாவும் நடைபெற உள்ளது. இந்நிலையில் 31 ம் நாளான நேற்று செவ்வாய்க்கிழமை ராஜசுய யாக வேள்வி நடைபெற்றது. தீமிதி விழா கமிட்டி தலைவர் கப்பல் இ.கங்காதரன், ஜி.ஏ.ரேணுகா ஆகியோரின் உபயத்தில் வேள்வி பூஜை நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து சொற்பொழிவாளர் கே.வி.சௌந்தர்ராஜன் தலைமையில் மகாபாரதம் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.

## ஆரணி புத்திரகாமேட்டீஸ்வரர் கோவில் சார்பில்
# சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு 500 பெண்கள் பால்குட ஊர்வலம்



**ஆரணி ஏப் 24:**
ஆரணி புத்திரகாமேட்டீஸ்வரர் கோவில் சார்பில் சித்ரா பவுர்ணமி முன்னிட்டு 500 பெண்கள் பால்குட ஊர்வலம்.

ஆரணி ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீ புத்திரகாமேட்டீஸ்வரர் கோவில் சார்பில் சித்ரா பவுர்னமி முன்னிட்டு 10ம் ஆண்டு பால்குட ஊர்வலம் நடைபெற்றது. ஆரணி பஜாரில் உள்ள ஸ்ரீ அரியாத்தம்மன் கோவில் இருந்து 500க்கும் மேற்பட்ட பெண்கள் பால் குடத்தை எடுத்துக் கொண்டு ஆரணி பஜார், வ.உ.சி தெரு, பெரிய கடை வீதி, வடக்கு மாட வீதி, காந்தி ரோடு, ஆறுமுகம் தெரு. தர்மராஜா கோயில் தெரு, புதுகாமூர் ரோடு வழியாக ஸ்ரீ புத்திரகாமேட்டீஸ்வரர் கோவிலை சென்றனர் பின்னர் கோவில் உள்ள புத்திரகாமேஸ்வரர், அம்பாள், விநாயகர், வள்ளி தெய்வானை, சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், ஆகிய சுவாமிகளுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றது. மாலை சுவாமி திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது.

## சித்ரா பவுர்ணமியையொட்டி
# பக்தர்கள் கிரிவலம் செல்ல ஏதுவாக ரோடுகளில் தண்ணீர் ஊற்றி வெப்பத்தை தணித்த நெடுஞ்சாலைத்துறை



**திருவண்ணாமலை ஏப்.24-**
திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமியையொட்டி தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலுவின் உத்தரவின் பேரில் பக்தர்கள் கிரிவலம் செல்ல ஏதுவாக வெப்பத்தை தணிக்க கிரிவலப்பாதை முழுவதும் லாரி மூலம் ரோடுகளில் நேற்று தண்ணீர் ஊற்றப்பட்டது.

திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமியையொட்டி நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை பல லட்சம் பக்தர்கள் கிரிவலம் சென்றனர். இதனால் 14 கி.மீ. தொலைவுள்ள கிரிவலப் பாதை நிரம்பி வழிந்தது. சித்ரா பவுர்ணமியையொட்டி அமைச்சர் எ.வ.வேலு உத்தரவின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன் அறிவுரையின் பேரில் நெடுஞ்சாலைத்துறை தி.மலை வட்ட கண்காணிப்பு பொறியாளர் பழனிவேல், கோட்டப் பொறியாளர் ராஜ்குமார் ஆகியோரது வழிகாட்டுதலின்படி உதவி கோட்ட பொறியாளர் அன்பரசு, உதவி பொறியாளர் ஏ.கலைமணி ஆகியோர் மேற்பார்வையில் நெடுஞ்சாலைத் துறை ஊழியர்கள் நேற்று காலை 11 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் பக்தர்கள் சிரமமின்றி நடந்து செல்வதற்கு ஏதுவாக கிரிவல பாதையான 14 கிலோ மீட்டர் தூரம் ரோடுகளில் லாரிகள் மூலம் தண்ணீரை ஊற்றி வெப்பத்தை தணித்தனர். மேலும் கிரிவலப்பாதையில் பல இடங்களில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த வெப்பத்தை தாங்க கூடிய நிழற்குடைகளில் பக்தர்கள் இளைப்பாறினர். கடும் வெயிலை சமாளிக்க நெடுஞ்சாலைத்துறை சார்பில் மாவட்ட நிர்வாகம் செய்து கொடுத்துள்ள வசதிகள் திருப்திகரமாக உள்ளதாக கிரிவலம் வந்த பக்தர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# தி.மலை சித்ரா பவுர்ணமியையொட்டி மூக்குப்பொடி சித்தர் ஆசிரமத்தில் பக்தர்களுக்கு அன்னதானம்

**திருவண்ணாமலை ஏப்.24-**
திருவண்ணாமலையில் கிரிவலம் வந்த பக்தர்களுக்கு மூக்குப்பொடி சித்தர் ஆசிரமத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

கடந்த 42 ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலைக்கு வந்து தங்கி பக்தர்களுக்கு அருள்பாலித்து வந்த மூக்குபொடி சித்தர் 2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் மரணம் அடைந்தார். அவர் உடல் அடக்கம் செய்யப்பட்ட திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் வாயு லிங்கம் அருகில் அவரது பெயரில் ஆசிரமம் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு மூக்குபொடி சுவாமி அறக்கட்டளை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மூக்குபொடி சித்தரின் குரு பூஜை விழா சிறப்புடன் நடைபெற்று வருகிறது.



இங்கு தினமும் பூஜைகள் நடந்து வருகிறது. உள்ளூர் மட்டுமன்றி வெளியூர்களில் இருந்தும் பக்தர்கள் வந்து தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த ஆண்டு நேற்று சித்ரா பவுர்ணமி விழாவையொட்டி கிரிவலம் வந்த பக்தர்களுக்கு மூக்குப்பொடி சித்தர் ஆசிரமத்தில் இடைவிடாது அன்னதானம் வழங்கப்பட்டது.

அறக்கட்டளையின் நிறுவனர் ஏ.துரை அன்னதானத்தை துவக்கி வைத்தார். இதில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர்கோட்டைஉள்புறத்தில் அமைந்துள்ளநாகதேவதை அம்மன் ஆலயத்தில் சித்ரா பவுர்ணமி முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் நாகதேவி அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலித்த காட்சி.

# மழை வேண்டி சித்ரா பவுர்ணமி தினத்தில் சிறப்பு யாகம்



**அரக்கோணம் ஏப். 24**
ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் பழனி பேட்டை அங்காளம்மன் ஆலயம் அருகில் காஞ்சி சங்கராச்சியர் ஆசி அருள் பெற்ற தச பூஜ பத்ரகாளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது இங்கு சித்ரா பவுர்ணமி தினம் முன்னிட்டும் மழை வேண்டியும் சிறப்பு யாகம் நடத்தப்பட்டது மேலும் பலர் குழந்தை பாக்கியம் வேண்டியும் வேலை வாய்ப்பு வேண்டியும் திருமண பாக்கியம் வேண்டியும் யாகத்தில் கலந்து கொண்டனர் இதனை ஆலய தலைமை பூசாரி மணி தலைமை வகித்து நடத்தினார் மகேஷ் பூசாரி வரவேற்றார் யாகத்தை மணிசேகர குருக்கள் வழிநடத்தினார் சிறப்பு அழைப்பாளராக அதிமுக மாவட்ட மீனவர் அணி நிர்வாகியும் பர்வத ராஜ குல சங்க செயலாளருமான செல்வம் கலந்து கொண்டு அன்னதானம் வழங்கினார்.

## புதுச்சேரியில் கஞ்சா விற்பதில் முன்விரோதம்:
# கோவில் பால்குட ஊர்வலத்தில் ரவடி வெட்டிக்கொலை

**புதுச்சேரி ஏப். 24**
புதுச்சேரி பெரியார் நகர் பத்தாவது குறுக்கு தெருவை சேர்ந்தவர் ருத்ரேஷ் வயது 27 கஞ்சா அடிதடி உள்ளிட்ட பல் வேறு வழக்குகள் இவர் மீது உள்ளது இவருக்கு திருமணம் ஆகி 2 1/2 வயதில் பெண் குழந்தை உள்ளது நேற்று காலை நெல்லித்தோப்பு பெரியார் நகர் 12வது குறுக்கு தெருவில் கங்கை முத்து மாரியம்மன் கோவிலில் சித்ரா பௌர்ணமி விழா நடைபெற்று வந்தது விழாவில் பால்குட ஊர்வலம் நடைபெற்றது இதில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு பால்குடம் எடுத்தனர் பால்குடம் முக்கிய வீதி வழியாக சென்று கோவிலை நோக்கி வந்து கொண்டிருந்தது இதில் ருத்ரேஷன் தாய் மற்றும் தங்கை ஆகியோரும் கலந்துகொண்டு பால்குடம் எடுத்தனர் இதற்காக ருத்ரேஷ் கோவில் வாசலில் எதிரே நின்று கொண்டிருந்தார் அப்பொழுது கத்தியுடன் இரு சக்கர வாகனத்தில் வந்த ஆறு பேர் கொண்ட கும்பல் கோவில் எதிர் நின்றிருந்த ருத்ரேஷை சுற்றி வளைத்து தலை உடல் கை உள்ளிட்ட பகுதிகளில் சரமாரியாக வெட்டியது இதில் பலத்த காயம் அடைந்த அவர் ரத்த வெள்ளத்திலேயே அங்கேயே சரிந்து விழுந்தார்

இதனால் பால்குடம் சுமந்து வந்த பெண்களும் அங்கிருந்த பொதுமக்களும் அதிர்ச்சி அடைந்தனர் ருத்ரேஷ் வெட்டிய அந்த ரவுடிகள் கத்தியுடன் பொதுமக்களை பார்த்து இனி நாங்கள் தான் எங்களை மீறி யாராவது நடந்தால் இதே நிலைதான் என்று கூறி மிரட்டி சாவகாசமாக கத்தியுடன் தெரிவித்து திரும்பிச் சென்றனர் இந்தத் தகவல் அறிந்த உடன் உருளையன்பேட்டை காவல் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ருத்ரேஷ் உடலை மீட்டு சிகிச்சைக்காக புதுவை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர் இதுகுறித்து போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் ருத்ரேஷ் கும் அதே பகுதியைச் சேர்ந்த கௌதம் என்பவருக்கும் இடையில் கஞ்சா விற்பனை போட்டி இருந்துள்ளது

இதனால் அடிக்கடி மோதிக் கொண்டுள்ளனர் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு கூட கௌதம் தரப்பினர் கஞ்சா விற்பதில் ஏற்பட்ட பிரச்சனையில் ருத்ரேஷ் கௌதம் தரப்பினர் அதைச் சேர்ந்த ஒருவரை கத்தியால் வெட்டியுள்ளார் இது குறித்து பதிவு செய்த போலீசார் ருத்ர இசை கைது செய்து சிறையில் அடைத்தனர் சமீபத்தில் தான் அவர் சிறையில் இருந்து வெளியில் வந்துள்ளார் இதனால் ருத்ரேஷை தீர்த்து கட்ட கௌதம் தரப்பினர் திட்டம் தீட்டியுள்ளனர் அதே நேரத்தில் ருத்ரேஷ் சிலருக்கு மது வாங்கி கொடுத்து கௌதமை தீர்த்து கட்ட திட்டம் தீட்டியதாக கூறப்படுகிறது இரு தரப்பினரும் கொலையை அரங்கேற்ற தொடர்ந்து ஒருவரை ஒருவர் நோட்டமிட்டும் வந்துள்ளனர் இந்த நிலையில் நேற்று காலை கோவில் அருகே ருத்ரேஷ் நின்று கொண்டிருந்தார் என்ற தகவல் கௌதம் தரப்பினருக்கு கிடைத்துள்ளது

இதையடுத்து கௌதம் தலைமையில் எழில் ஈஸ்வரன் உள்பட ஆறு பேர் கொண்ட கும்பல் இருசக்கர வாகனத்தில் வந்து ருத்ரசை சாரமாறியாக வெட்டி படுகொலை செய்து விட்டு தப்பிச் சென்றது

இன்று போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது தொடர்ந்து ருத்ரேஷை கொலை செய்துவிட்டு தப்பி ஓடிய கும்பலை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்

வட்டாட்சியர் அவர்கள்
திருப்பத்தூர்
ந.க.ஆ4/1244/2024
நாள்: 23.04.2024
சென்றாயன்
த/பெ.கோவிந்தசாமி,
வக்கணம்பட்டி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம் மற்றும் மாவட்டம்
........மனுதாரர்
உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்.
........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது தாயார் திருமதி.கமலா க/பெ. கோவிந்தசாமி என்பவர் கடந்த 03.07.2012-ம் தேதியில் திருப்பத்தூர் வட்டம் மற்றும் மாவட்டம், வக்கணம்பட்டி கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
சென்றாயன், த/பெ.கோவிந்தசாமி,
வக்கணம்பட்டி கிராமம்,
திருப்பத்தூர் வட்டம் மற்றும் மாவட்டம்

## திருவாரூர் மாவட்ட
## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாணவ, மாணவிகளுக்கான என் கல்லூரி கனவு விழிப்புணர்வு நிகழ்ச்சி
### கலெக்டர் தி.சாரு ஸ்ரீ தலைமையில் நடைபெற்றது



**திருவாரூர்,ஏப்.24-**
திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாணவ, மாணவிகளுக்கான "என் கல்லூரி கனவு" விழிப்புணர்வு நிகழ்ச்சி கலெக்டர் தி.சாருஸ்ரீ., தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தெரிவித்ததாவது...

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் "என் கல்லூரி கனவு" என்ற தலைப்பில் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியானது, சுமார் 300-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்கள் 12ஆம் வகுப்பிற்கு பிறகு உயர்கல்விக்கு சரியான வழியை ஏற்படுத்தித்தருவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் சிறந்த கல்வியாளர்களைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக வருகை தந்துள்ளனர்.

மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு படித்து தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் தங்களின் எதிர்கால கனவினை நனவாக்கும் வகையில் அவர்களின் உயர்கல்விக்கான வாய்ப்புகள் பற்றிய பிரிவு வாரியான பட்டப்படிப்புகள், பட்டயப்படிப்புகள் என்னென்ன உள்ளன என்பதையும், கல்லூரிகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதையும், மேற்படிப்பினை முடித்தவுடன் கிடைக்கும் வேலைவாய்ப்புகள், போட்டித்தேர்வுகள் மற்றும் தொழில் வழிகாட்டல், ஊக்கப்படுத்துதல், வங்கிக்கடன் மற்றும் உதவித்தொகை பெறுதல் போன்ற விவரங்கள் புகழ் பெற்ற வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டு வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றது. இத்தகைய நிகழ்ச்சிகள் மாணவர்களின் எதிர்கால குறிக்கோளை திட்டமிட்டு அடையவும், வெற்றி பெறவும் வழிவகை செய்யும்.

மேலும், தோல்விகளை வெற்றிகளின் தொடக்கமாக மாணவர்கள் எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும். இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தேர்ச்சி பெற்ற அனைத்து மாணாக்கர்களும் சிறந்த வாய்ப்புகளுக்கு எந்த கல்லூரியில் என்ன படிக்கலாம் வருங்காலத்தை வளப்படுத்த எந்த பாடப்பிரிவை தேர்ந்தெடுக்கலாம் உதவித் தொகை வாய்ப்புகள் என்ன போன்ற தகவல்களை தெரிந்து கொள்ள இவ்வாய்ப்பி;னை பயன்படுத்தி சரியான உயர்கல்வியைத் தேர்ந்தெடுத்து வாழ்வில் வெற்றிப்பெறுமாறு கலெக்டர் தி.சாருஸ்ரீ., தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கு.சண்முகநாதன் , மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புகழேந்தி, சென்னை உயர்நீதிமன்றம், மாநில சட்ட ஆலோசகர் கணபதி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அமுதா, தாட்கோ மாவட்ட மேலாளர் அன்பழகன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பத்மநாபன், சென்னை மேலாண்மைத்துறை பேராசிரியர் மரு.கோபி, சவளக்காரன் அரசு(ஆ.தி.ந) மேல் நிலைப் பள்ளி தலைமையாசிரியர் இரமேஷ், கருத்தாளர்கள் அருள், சரவணன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## சென்னையில் செல்போனில் பேசிக்கொண்டிருந்தபோது 3 பேருக்கு வெட்டு

சென்னை ஏப் 24-
செல்போனில் பேசிய சிறுவன் உள்பட 3 பேரை சரமாரியாக வெட்டிய 10 பேர் கொண்ட கும்பலை தேடி வருகின்றனர்.

சென்னை வியாசர்பாடி மூர்த்திங்கர் நகர் ஹவுசிங் போர்டு பகுதியை சேர்ந்தவர் நந்தா (17). இவர் ஐடிஐ படித்துள்ளார். இவரது தந்தை ஓராண்டுக்கு முன்பு குடும்பத்தைவிட்டு பிரிந்துசென்றுவிட்டார். இதனால் நந்தா தனது தாய்மாமன் மகன் தயாள்ராஜ், பாட்டி மேனகா ஆகியோருடன் வசித்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 11 மணி அளவில் அங்குள்ள எச் பிளாக் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் நந்தா தனது செல்போனில் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென வந்த 10 பேர், நந்தாவை சுற்றிவளைத்து சரமாரியாக கத்தியால் வெட்டியுள்ளனர். இதை தடுக்க சென்ற தயாள் ராஜ், மேனகா ஆகியோரையும் சரமாரியாக வெட்டி விட்டு தப்பினர். இதில் படுகாயம் அடைந்த 3 பேரையும் உடனடியாக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.இதுசம்பந்தமாக எம்கேபி.நகர் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். சிறுவன் உள்பட 3 பேரை எதற்காக வெட்டினர் என்று விசாரிக்கின்றனர்.

## டிராக்டரில் குடிநீர் விற்பனை செய்வதில் தகராறு: இருவருக்கு சரமாரி வெட்டு

**சென்னை ஏப் 24-**
டிராக்டரில் குடிநீர் விற்பனை செய்வதில் ஏற்பட்ட தகராறில், 2 பேரை அரிவாளால் வெட்டிய 3 பேர் கைது செய்யப்பட்டனர். பூந்தமல்லி அடுத்த சென்னீர்குப்பம் பகுதியை சேர்ந்தவர் வெங்கடேசன் (32). இவரது நண்பர் ஜெயக்குமார். இருவரும் சென்னீர்குப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் டிராக்டர் மூலம் வீடுகளுக்கு குடிநீர் விற்பனை செய்கின்றனர். சென்னீர்குப்பம் ஊராட்சி தலைவராக அதிமுகவை சேர்ந்த கோட்டீஸ்வரி அன்பு உள்ளார்.

இவரது மருமகன் மணிகண்டன் (35). இவர் அதே பகுதியில் டிராக்டர் மூலம் வீடுகளுக்கு குடிநீர் விற்பனை செய்கின்றார்.

இதுதொடர்பாக வெங்கடேசனுக்கும் மணிகண்டனுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்து உள்ளது. நேற்று முன்தினம் வெங்கடேசனின் அலுவலகத்துக்கு சென்ற மணிகண்டனின் நண்பர்கள் சிலர்,வெங்கடேசன், ஜெயக்குமார் ஆகியோரை சரமாரியாக அரிவாளால் வெட்டிவிட்டு தப்பினர். பலத்த காயம் அடைந்த அவர்களை மீட்டு கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்த புகாரின்பேரில் பூந்தமல்லி போலீசார் வழக்குபதிவு செய்து பேரை கைது செய்து விசாரித்து வரு கின்றனர். இந்த சம்பவத்துக்கு காரணமான அதிமுக ஊராட்சி தலைவியின் மருமகன் மணிகண்டனை கைது செய்யக்கோரி வெங்கடேசனின் உறவினர்கள், ஆவடி-சென்னீர்குப்பம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதித்து பரபரப்பு நிலவியதால் பூந்தமல்லி போலீசார் சென்று மறியலில் செய்தவர்களை சமாதானப்படுத்தினர். தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர். இதையடுத்து மறியல் கைவிட்டு சென்றனர்

## திருமருகல் அருகே மா சாகுபடி பணிகள் உதவி தோட்டக்கலை அலுவலர் ஆய்வு



**நாகப்பட்டினம்,ஏப்.24-**
நாகை மாவட்டம் திருமருகல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மா சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செந்தூரம், நீலம், மல்கோவா, பங்கனப்பள்ளி, பெங்களூரா உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.இந்த சாகுபடி பணிகளை திருமருகல் உதவி தோட்டக்கலை அலுவலர் செல்வபாண்டியன் செவ்வாய் கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறுகையில், மா ரகத்தைப் பொறுத்து அதன் பருவம் மாறும். ஏப்ரல்,மே,ஜூன் மாதங்கள் தான் அறுவடை காலம். அறுவடை முடிந்த பிறகு விவசாயிகள் தோட்டத்தை பராமரிக்காமல் அப்படியே விட்டுவிடுகிறார்கள். அது தவறு அறுவடை முடிந்த பிறகு மரங்களில் கவாத்து செய்வது அவசியம். கவாத்து செய்யும்போது சூரிய ஒளி மரங்களுக்குள் ஊடுருவும். அதேசமயம் பூச்சிகளின் தாக்கமும் குறைந்துவிடும்.கவாத்து செய்வது குறித்து விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு இல்லை. அறுவடை முடிந்து ஜூலை மாத கடைசியில் கவாத்து செய்ய வேண்டும். ஏதாவது பூச்சி, நோய் தாக்குதல் இருந்தால் அதையும் சரி செய்ய வேண்டும். பூச்சிகளின் தாக்குதல்களுக்கு தகுந்தாற்போல மருந்துகளை நாங்கள் பரிந்துரை செய்வோம். கவாத்து முடிந்தவுடன், மரங்களுக்கு உரம் வைக்க வேண்டும். இதன் மூலம் பூக்கள் அதிகம் வைத்து பிஞ்சு வைத்து மகசூல் அதிகம் கிடைக்கும் என கூறினார்.

## கோயம்பேடு மார்க்கெட்டில் ரசாயனம் மூலம் பழுக்க வைத்த 4 டன் மாம்பழம் பறிமுதல்

**சென்னை ஏப் 24-**
சென்னை கோயம்பேடு, பழ மார்க்கெட்டில் ரசாயனம் கலந்து செயற்கை முறையில் பழுக்க வைத்து வாழை மற்றும் மாம்பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக உணவு பாதுகாப்பு துறைக்கு தொடர்ந்து ஏராளமான புகார்கள் வந்தது.

இந்த நிலையில் சென்னை மண்டல உணவு பாதுகாப்பு துறை அதிகாரி டாக்டர் சதீஷ் குமார் உத்தரவின்பேரில் கோயம்பேடு உணவு பாதுகாப்பு துறை அதிகாரி சுந்தரமூர்த்தி மற்றும் அங்காடி நிர்வாக குழு ஊழியர்கள் சுமார் 10-க்கும் மேற்பட்டோர் இன்று அதிகாலை 5 மணி அளவில் கோயம்பேடு பழ மார்க்கெட்டில் உள்ள கடைகளில் அதிரடி சோதனை நடத்தினர். 100-க்கும் மேற்பட்ட கடைகளில் நடத்திய சோதனையில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ரசாயனம் கலந்து மாம்பழம் மற்றும் வாழைத்தார்கள் பழுக்க வைப்பது கண்டுபிடிக்கப்பட்டது.இதையடுத்து 4 டன் மாம்பழம் மற்றும் 3 டன் வாழைப் பழங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் உணவு பாதுகாப்பு துறையின் விதிமுறைகளை மீறி செயல்பட்ட 50-க்கும் மேற்பட்ட பழக்கடைகளுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது.

## தொற்று நோய் பரவலை பற்றி பொது மக்கள் தாங்களாகவே முன்வந்து சுகாதாரத் துறைக்கு தகவல் தெரிவிக்கும் வசதி
### கலெக்டர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தகவல்

**அரியலூர்,ஏப்.24-**
தொற்றுநோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்காக ஒருங்கிணைந்த சுகாதார தளம் (IHIP), ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் இணையதளத்தை (IDSP) மறுசீரமைப்பு செய்யப்பட்டு தொடங்கப்பட்டுள்ளது. இந்ததளத்தில் S.P மற்றும் L ஆகிய மூன்று படிவங்கள் உள்ளன. சுகாதார ஆய்வாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் மூலம் பெறப்பட்ட தொற்றுநோய் குறித்த தகவல்கள் இந்த படிவங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டு தொற்றுநோய் பரவல் தடுப்பு மாவட்ட மற்றும் வட்டார அளவிலான விரைவு நடவடிக்கை குழுக்கள் மூலம் (Rapid Response Team) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் ஏற்படும் காய்ச்சல், இருமல் சளி, வயிற்றுப்போக்கு வாந்தி பேதி, தோலில் ஏற்படும் கொப்பளங்கள் / அம்மை நோய்கள், மஞ்சள் காமாலை, வெறிநாய் கடி, அசாதாரண உயிரிழப்புகள் மனிதர்கள் / பறவைகள் போன்ற தகவல்களை தாங்களாகவே முன்வந்து கீழ் காணும்,https://ihip.mohfw.gov.in/cbs/-!. இணையதளத்தில் பெயர், தொலைபேசி எண், வயது, வேலை, கிராமம், மாவட்டம், மாநிலம், நிகழ்வு நடந்த நாள், இடம் மற்றும் தொற்று நோய் குறித்த விவரம் போன்றவற்றை பதிவு செய்து அரசுக்கு தாங்களாகவே முன் வந்து தெரிவிப்பதின் மூலம் பொது சுகாதாரத்துறை விரைந்து கள நடவடிக்கை எடுத்து கொள்ளை நோய் பரவலைத் தடுக்க இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தகவல் அளிப்பவரின் விவரங்கள் பாதுகாக்கப்படும் என்பதும் தெரிவித்து கொள்ளப்படுகிறது. எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் கொள்ளை நோய் பரவலை தடுத்திட இந்த இணையதள வசதியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கலெக்டர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தெரிவித்துள்ளார்.

## கந்தன் குடி முருகன் கோவிலில் சித்ரா பௌர்ணமி விழாவையொட்டி முளைப்பாரி வளர்க்கப்பட்டு வீதி உலா



**திருவாரூர்,ஏப்.24-**
அம்பன் அம்பரன் இரு அசுரர்களை வதம் செய்வதற்காக அன்னை பராசக்தி காளி ரூபம் எடுத்து வந்த போது தன்னுடன் வந்த குழந்தை இங்கு தங்கியதால் கந்தன் குடி என பெயர் பெற்றது. இவ்வாறு வரலாற்று சிறப்பு மிக்க இந்த கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை பௌர்ணமி விழா வெகு விமர்சியாக நடைபெறும் அந்த வகையில் இந்த வருட திரு விழா கடந்த 14ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது.

ஒவ்வொரு நாளும் தொடர்ந்து உலக மக்கள் நலம் பெற வேண்டி சிறப்பு யாகம் நடைபெற்றது விழாவின் முக்கிய நிகழ்வாக தீர்த்தவாரி முருகர் ஊர்வலம் நடைபெற்றது. கடந்த10 நாட்களாக அதில் நவதானியங்கள் பூஜை செய்து முளைப்பாரி வளர்க்க பட்டு அதனை முருகர் சாமிக்கு சாத்தப்பட்டு வீதியுலா காட்சி நடைபெற்றது.

இதில் கந்தன் குடி கிராம மக்கள் மட்டுமல்லாது திருவாரூர் மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

## சென்னையில் உள்ள பிரபல மாலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை ஏப் 24-**
சென்னை கோயம்பேடு மேம்பாலம் அருகே உள்ள தனியார் வணிக வளாகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுவிக்கப்பட்டுள்ளது.

இ-மெயில் மூலம் வந்த வெடிகுண்டு மிரட்டலால் வணிக வளாகத்தில் பரபரப்பு ஏற் பட் டுள் ளது.த க வல் அறிந்து வந்த திருமங்கலம் போலீசார் மோப்ப நாய்கள் மூலம் வணிக வளாகத்தில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் வெடிகுண்டு நிபுணர்களும் வணிக வளாகத்தில் சோதனை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே கடந்த மாதம் சென்னை, கோவையில் உள்ள தனியார் பள்ளிகளுக்கு இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுவிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், தற்போது வணிக வளாகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுவிக்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது கோடை வெயில் அதிகரிப்பதால் கீழ்காணும் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்
### கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா தகவல்

**புதுக்கோட்டை,ஏப்.24-**
புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது கோடை வெயில் அதிகரித்து வெப்ப அலையின் தாக்கம் இருக்கலாம் என சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதன் பேரில் பொதுமக்கள் இது குறித்து அச்சப்பட தேவையில்லை எனவும், வெப்ப அலையின் தாக்கத்திலிருந்து தங்களை காத்துக்கொள்ள கீழ்காணும் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் புதுக்கோட்டை கலெக்டர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வெப்ப அலை வீசும் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள்:

நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் பொதுமக்கள் தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்கவும்.

உடலின் நீர்ச்சத்து குறையாமல் பராமரிக்க தாகம் எடுக்காவிடிலும் கூட அடிக்கடி போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும்.

மெல்லிய, வெளிர் நிறமுள்ள, தளர்வான பருத்தி ஆடைகளை அணியவும். வெளியே செல்லும் போது தலைக்கு தொப்பி அணிந்து அல்லது குடையின் பாதுகாப்புடன், காலணி அணிந்து செல்லவும்.

வெளிப்புற வெப்பநிலை அதிகமாக இருக்கும்போது கடினமான வேலைகளை செய்வதைத் தவிர்க்கவும்;. குறிப்பாக மதியம் 12.00 மணி முதல் 3.00 மணி வரை வெளிப்புற வேலைகளைத் தவிர்க்கவும். பயணங்கள் மேற்கொள்ளும் போது குடிநீரை எடுத்துச் செல்லவும்.

வெளியில் வேலை செய்யும்போது தொப்பி அணியவும் அல்லது குடையைப் பயன்படுத்தவும். மேலும், தலை, கழுத்து, முகம் மற்றும் கைகால்களில் ஈரமான துணிகளைப் பயன்படுத்தவும்.

நிறுத்தப்பட்ட வாகனங்களில் குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை விட்டுச் செல்ல வேண்டாம்.

மயக்கம் அல்லது உடல் நிலை சரியில்லையென உணர்ந்தால் உடனடியாக மருத்துவரை அணுகவும்.வீட்டில் தயாரித்த நீர்மோர், லஸ்ஸி, நீராகாரம்;, எலுமிச்சைச் சாறு போன்ற பானங்களைப் பருகி நீரிழப்பைத் தவிர்க்கவும்.

கால்நடைகளை நிழலான இடங்களில் கட்டி வைப்பதோடு அவற்றிற்கு போதுமான தண்ணீர் வழங்கிட வேண்டும். வீடுகளை எப்போதும் குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். மேலும், திரைச்சீலைகள், மற்றும் இரவு நேரங்களில் ஜன்னல்களைத் திறந்து வைக்கவும். மின்விசிறியைப் பயன்படுத்த வேண்டும். மேலும் அடிக்கடி குளிர்ந்த நீரில் குளிக்கவும்.

வெப்ப அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட முதியவர்களை குளிர்ந்த மற்றும் நிழலான இடத்தில் படுக்க வைத்து ஈரமான துண்டுகளால் கழுத்து மற்றும் கைகளில் துடைக்க வேண்டும். வெப்பம் குறைந்த நீரை தலையில் ஊற்றவும். எலுமிச்சை சர்பத் அல்லது நீர் மோர் கொடுத்து உடலின் நீர் இழப்பை சரிசெய்யவும். மேலும் பாதிக்கப்பட்ட நபரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தேவையான மருத்துவ உதவி செய்ய வேண்டும். மேலும், கோடைக்காலத்தில் வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தவிர்க்க விறகு அடுப்புகளைப் பயன்படுத்திய பிறகு தண்ணீர் ஊற்றி அணைத்து விடவும். சமையல் எரிவாயு உருளையை பாதுகாப்பாக உபயோகித்து முடித்துவிட்டு முறையாக மூடிவைப்பது அவசியம் தேவையற்ற குப்பைகளை வீட்டின் அருகில் பற்றவைப்பதைத் தவிர்க்க வேண்டும். மேலும், மின்சாதனங்களால் தீ விபத்து ஏற்படாதவாறு மின் சாதனங்களை கவனமாக கையாள வேண்டும். கோடைகாலம் முடியும் வரை எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா, தெரிவித்துள்ளார்.

குடிபோதையில் வாகனத்தை ஓட்டாதே!
குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தாதே!!

## நாகப்பட்டினம் மாவட்டத்தில்
## முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றிய 15 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்
### கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் தகவல்

**நாகப்பட்டினம்,ஏப்.24-**
சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, "முதலமைச்சர் மாநில இளைஞர் விருது" ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 வயது முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.1,00,000ஃ-ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். அதன்படி, 2024-ஆம் ஆண்டிற்;கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2024 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளது.

விருதுக்கான குறிக்கோள் : அ. இளைய சமுதாயத்தினரின் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் அவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்குதல். ஆ. இளைஞர்களை (15 முதல் 35 வயது வரை) சமூகத் தொண்டுகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல். இ. தலைச்சிறந்த பணிகளை ஆற்றிய இளைஞர்களுக்கு அங்கீகாரம் அளித்து அவர்களை எதிர்கால தலைமைக்கு உருவாக்குதல் போன்றவையாகும். விண்ணப்பிக்க தகுதியான நிபந்தனைகள் : விருதிற்கு விண்ணப்பிக்கும் ஆண்கள் பெண்கள் 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும். நிதியாண்டின் துவக்க நாளான ஏப்ரல் 1, 2023 (01.04.2023) அன்று 15 வயது நிரம்பியவராகவும், நிதியாண்டின் இறுதி நாளான மார்ச் 31, 2024 (31.03.2024) அன்று 35 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தமிழ்நாட்டில் சமூக நலனுக்காக தொண்டு புரிந்தவராக இருத்தல் வேண்டும். விருதிற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் வசித்திருத்தல் வேண்டும் (சான்று இணைக்கப்படல் வேண்டும்). விருதிற்கு முந்தைய நிதி ஆண்டில் (2023-2024) அதாவது 01.04.2023 முதல் 31.03.2024 வரை மேற்கொள்ளப்பட்ட தொண்டுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் சமுதாயம் சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உண்டாக்கியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்த தொண்டு கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள் பள்ளிகளில் பணிபுரிவோர் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கத் தகுதி கிடையாது. சமூக தொண்டுகளில் பொதுவான ஈடுபாட்டுடன் செயல்பட்டவராகவும், தாங்கள் வசிக்கின்ற பகுதிகளில் பொதுமக்களிடையே நன்மதிப்பு பெற்றவர்களாகவும் இருப்பது முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதின் தேர்வின் போது கருத்தில் கொள்ளப்படும். விண்ணப்பங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளமான 01.05.2024 முதல் கடைசி நாள் 15.05.2024 அன்று மாலை 4.00 மணி வரை விண்ணப்பிக்கலாம். மேற்படி பயன்களைக் கருத்தில் கொண்டு, சமூக நலனுக்காக தொண்டு புரிந்த, நாகப்பட்டினம் மாவட்;டத்தைச் சார்ந்த 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் "முதலமைச்சர் மாநில இளைஞர் விருதிற்கு விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்கள்.

## கரூர் மாவட்டத்தில் முதல்வரின் இளைஞர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்
### கலெக்டர் மீ.தங்கவேல் தகவல்

**கரூர்,ஏப்.24**
சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியினை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆணடும் சுதந்திர தினத்தன்று 15 வயது முதல் 3 வயது வரையுள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.100000/- ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். இதுகுறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தங்கவேல் , தெரிவிக்கையில் 2024 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2024 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்பட உள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண்/ பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். 01.04.2023 அன்று 15 வயது நிரம்பியவராகவும், மார்ச் 31.03.2024 அன்று 35 வயதுக்குள்ளாகவும் இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில் (2023-2024) அதாவது 01.04.2023 முதல் 31.03.2024 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.

விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும். ( அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்) விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு செய்த தொண்டு கண்டறிப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய. மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லுரரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும். இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள். 01.05.2024 முதல் கடைசி நாள். 15.05.2024 அன்று மாலை 4.00 மணி ஆகும்.

எனவே மேற்கண்ட நிதியாண்டிற்கு கரூர் மாவட்டத்திலுள்ள தகுதியுள்ள நபர்கள் www.sdat.tn.gov.in விண்ணப்பித்து பயன்பெறுமாறும் மேலும் விவரங்களுக்கு கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தொலைபேசி எண். 7401703493 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள மாவட்ட தலைவர் மீ.தங்கவேல், தெரிவித்துள்ளார்.

மழைநீர் உயிர்நீர்

## ஐ.பி.எல்.லில் 200 விக்கெட்கள்:
# புதிய சாதனை படைத்தார் சஹால்



**ஜெய்ப்பூர், ஏப். 24-**

ஐபிஎல் தொடரில் 200 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரராக யுஸ்வேந்திர சஹால் சாதனை படைத்துள்ளார்.

**38-வது லீக் போட்டி...**

ஐபிஎல் தொடரின் 17வது சீசன் நாளுக்கு நாள் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளை அதிகரித்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 38ஆவது லீக் போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள இந்தூர் மைதானத்தில் நடைபெற்றது.

**முதல் பந்துவீச்சாளர்...**

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் பேட்டிங் செய்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் மும்பை அணி 9 விக்கெட்டுகளை இழந்து 179 ரன்கள் எடுத்தது. ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் யுஸ்வேந்திர சஹால் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். இதன்மூலம் ஐபிஎல் தொடரில் 200 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் பந்துவீச்சாளராக மாறி சாதனை படைத்துள்ளார். யுஸ்வேந்திர சஹால்க்கு அடுத்தபடியாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரர் டுவைன் பிராவோ 183 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய 2-வது வீரராக உள்ளார்.

## ஐ.பி.எல். 38-வது லீக் ஆட்டம்:
# மும்பையை வீழ்த்தியது ராஜஸ்தான்



**இந்தூர், ஏப். 24-**

மும்பை இந்தியன்ஸ்க்கு எதிரான ஆட்டத்தில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

**மும்பை பேட்டிங்...**

ஐபிஎல் தொடரின் 17-வது சீசன் நாளுக்கு நாள் ரசிகர்களின் எதிர்பார்ப்புகளை அதிகரித்து வருகிறது. இதில் நேற்று (ஏப். 22) நடைபெற்ற 38-வது லீக் போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இப்போட்டியில் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள இந்தூர் மைதானத்தில் நடைபெற்றது இதில் டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. மும்பை இந்தியன்ஸ் அணி தரப்பில் தொடக்க ஆட்டக்காரர்களாக ரோஹித் சர்மா மற்றும் இஷான் கிஷன் ஆகியோர் களமிறங்கினர்.

**திலக் வர்மா...**

ஆரம்பம் முதலே ராஜஸ்தான் அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் மும்பை இந்தியன்ஸ் வீரர்கள் திணறினர். ரோஹித் சர்மா 6ரன்களுக்கு ஆட்டமிழக்க, இஷான் கிஷன் டக் அவுட் ஆகி வெளியேறினார். இதனைத் தொடர்ந்து வந்த சூர்யகுமார் யாதவும் சொற்ப ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து களமிறங்கிய திலக் வர்மா மட்டும் நிதானமாக விளையாடி அணியின் ரன் எண்ணிக்கையை உயர்த்தினார். திலக் வர்மா 45 பந்துகளில் 65 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த வந்த வீரரான நேஹல் வதேரா 49ரன்கள் விளாசிய நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

**180 ரன்கள் இலக்கு...**

20ஓவர்களின் முடிவில் 9விக்கெட்கள் இழந்து மும்பை இந்தியன்ஸ் அணி 179 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக, திலக் வர்மா 45 பந்துகளில் 65 ரன்களை விளாசினார். நேஹால் வதேரா 24 பந்துகளில் 49 ரன்களை எடுத்தார். இதையடுத்து, ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு 180 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது. நிர்ணயிக்கப்பட்ட 18. 4 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 183 ரன்களை விளாசினர். அதிகபட்சமாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் 60 பந்துகளில் 104 ரன்களை குவித்தார். சஞ்சு சாம்சன் 28 பந்துகளில் 38 ரன்களை குவித்தார். ஜோஸ் புட்டலர் 25 பந்துகளில் 35 ரன்களை எடுத்தார். இந்த ஆட்டத்தில் சிறப்பாக பந்துவீசிய சந்தீப் சர்மாவுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

**தொடர்ந்து முதலிடம்....**

இதுவரை 8 போட்டிகளில் விளையாடி ஒரு போட்டியில் தோல்வி மற்றும் ஏழு போட்டியில் வெற்றி பெற்று 14 புள்ளிகளுடன் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி முதலாவது இடத்தை தக்க வைத்துள்ளது. அதேபோல 8 போட்டிகளில் விளையாடி 5 தோல்வி மற்றும் 3போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி புள்ளிப் பட்டியலில் 6புள்ளிகளைப் பெற்று 7வது இடத்தில் உள்ளது.

**சஞ்சு சாம்சன் பேட்டி...**

வெற்றி பெற்ற பின் ராஜஸ்தான் கேப்டன் சஞ்சு சாம்சன் அளித்த பேட்டியில் கூறியதாவது., இந்த போட்டியில் நாங்கள் வெற்றி பெற்றதற்கான அனைத்து வாழ்த்துகளும் எங்கள் அணியின் அனைத்து வீரர்களையுமே சேரும். பந்துவீச்சின் போது பவர்பிளே ஓவர்களில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டோம். ஆனால் மிடில் ஓவர்களில் இடது கை வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஸ்கோரை உயர்த்திவிட்டனர். ஆனால் நாங்கள் திரும்பி வந்ததுடன் இந்த வெற்றியையும் பதிவு செய்துள்ளோம்.

**ஓய்வு கிடைக்கும்...**

நாங்கள் பேட்டிங் செய்ய வரும்போது மைதானம் மெதுவாக இருந்தாலும், விளக்குகளின் வெளிச்சத்தால் விளையாடும் போது அது பேட்டிங்கிற்கு சாதமாக அமைந்தது. தொழில்முறை வீரர்கள் தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளனர். மேலும் யஷஸ்வி ஜெய்ஸ்வாலுக்கு யாரிடமிருந்தும் அறிவுரைகள் தேவையில்லை என நினைக்கிறேன். அவர் மிகவும் நம்பிக்கையான வீரர். இவ்வாறு அவர் கூறினார்.

**ஹர்திக் பாண்ட்யா...**

இந்த ஆட்டத்தில் தோல்வி அடைந்த பின் மும்பை கேப்டன் பாண்ட்யா அளித்த பேட்டியில் கூறியதாவது, ஆரம்ப கட்டத்தில் நாங்களே சில தவறுகளை செய்து சிக்கலில் மாட்டிக்கொண்டோம்.ஆனால் திலக் வர்மா மற்றும் நேகல் வதேரா சிறப்பாக பேட்டிங் செய்து ரன்களை சேர்த்தார்கள். எனினும் நாங்கள் நல்ல முறையில் பேட்டிங்கை முடிக்கவில்லை குறைந்தது. 10 - 15 ரன்கள் குறைவாக அடித்துவிட்டோம். இதே போன்று பந்துவீச்சிலும் ஸ்டம்ப்க்கு குறி வைத்து பந்து வீசி இருக்க வேண்டும். நாங்கள் பவர் பிளேவில் அடிப்பதற்கு ஏதுவாக பந்துகளை வீசி விட்டோம். நிச்சயமாக இது எங்களுடைய சிறந்த நாள் கிடையாது. நாங்கள் எங்களுடைய சிறந்த செயல்பாட்டை இன்று மைதானத்தில் வெளிப்படுத்தவில்லை. எங்கள் அணியில் ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. அது அவர்களுக்கு தெரியும்.

**உடன்பாடு இல்லை...**

நாங்கள் செய்யும் தவறிலிருந்து திருத்திக் கொள்ள வேண்டும். திரும்ப செய்யக் கூடாது. எங்கள் அணியில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு குறை இருக்கிறது. அது குறித்து அவர்கள் உழைக்க வேண்டும். எங்கள் அணியில் சில மாற்றங்களை கொண்டு வரலாம் என ரசிகர்கள் கேட்கிறார்கள்.ஆனால் அதில் எனக்கு உடன்பாடு கிடையாது. நான் ஒவ்வொரு வீரருக்கும் ஆதரவளிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நாங்கள் நல்ல கிரிக்கெட்டை விளையாட வேண்டும் என்பது குறித்துதான் கவனம் செலுத்துகிறோம். எங்கள் அணியில் உள்ள திட்டத்தில் எந்த மாற்றமும் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

## பறவை காய்ச்சல் எதிரொலி:
# தமிழ்நாட்டின் எல்லையில் சோதனை மேலும் தீவிரம்

**சென்னை, ஏப். 24-**

கேரளாவில் பரவி வரும் பறவை காய்ச்சல் காரணமாக தமிழ்நாட்டில் எல்லைப்பகுதிகளில் மேலும் சோதனையை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கேரளாவில் பறவை காய்ச்சல் பரவல் இருப்பதால் அந்த காய்ச்சல் தமிழகத்துக்குள் பரவுவதை தடுக்க தமிழக-கேரள எல்லையில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு வரும் லாரிகள் உள்ளிட்ட வாகனங்களில் சோதனை செய்த பின்னரே உள்ளே அனுமதிக்கின்றனர்.

அத்துடன் சரக்கு வாகனங்கள் மற்றும் பிற வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின்னரே தமிழகத்திற்குள் அனுமதிக்கப்படுகிறது. அதுபோன்று கேரளாவில் இருந்து பொருட்கள் ஏற்றி வந்தால் அவை என்ன பொருட்கள் என்று வாகனம் முழுவதுமாக சோதனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில், தமிழக - கேரள எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்த கால்நடைத்துறையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. கேரளாவில் இருந்து வரும் கோழி, வாத்து, முட்டை, கோழி தீவனங்கள் கொண்டுவரும் வாகனங்களை முழுமையாக சோதனை செய்ய உத்தரவிடப்பட்டு உள்ளது. தமிழக- கேரள எல்லையில் 12 சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருவதாக கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சஞ்சு சாம்சனுக்கு ஆதரவு

ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் ராயல்ஸ் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் தரப்பில் பந்துவீச்சில் சந்தீப் சர்மா 5 விக்கெட்டும், பேட்டிங்கில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 104 ரன்னும் அடித்தனர். இந்நிலையில், ரோகித்துக்கு பின் சஞ்சு சாம்சனை இந்திய டி20 அணியின் கேப்டனாக வளர்த்தெடுக்க வேண்டும் என இந்திய முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் தனது கருத்தை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

யஷஸ்வி ஜெய்ஸ்வாலின் ஆட்டம் பார்ம் தற்காலிகமானது, கிளாஸ் நிரந்தரமானது என்பதற்கான சான்று. ஜெய்ஸ்வால் மற்றும் கீப்பர் பேட்ஸ்மேன் பற்றி எந்த விவாதமும் இருக்கக்கூடாது. டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் சஞ்சு சாம்சன் இடம் பெற வேண்டும். ரோகித்துக்குப் பிறகு இந்தியாவின் அடுத்த டி20 கேப்டனாக சாம்சனை வளர்த்தெடுக்க வேண்டும். அதில் ஏதேனும் சந்தேகம் உள்ளதா...? இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அணியில் மீண்டும் கான்வே?

நடப்பு ஐ.பி.எல் தொடரில் சென்னை அணியில் இடம் பெற்றிருந்த டெவான் கான்வே காயம் காரணமாக விலகினார். அவருக்கு பதிலாக இங்கிலாந்தை சேர்ந்த வேகப் பந்து வீச்சாளர் ரிச்சர்ட் கிளீசன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். சி.எஸ்.கே அணியில் சிறப்பாக செயல்பட்டு வரும் வேகப் பந்துவீச்சாளர் முஸ்தாபிசுர் ரஹ்மான் இன்னும் சில நாட்களில் அணியில் இருந்து விலக இருக்கும் நிலையில், அவரது இடத்தை நிரப்ப ரிச்சர்ட் கிலீசன் அணியில் இடம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகிய டெவான் கான்வே மீண்டும் சென்னை அணியில் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஐ.பி.எல் தொடர் முடிந்த உடன் 2024 டி20 உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ளது. இந்த உலகக்கோப்பை தொடருக்கு டெவான் கான்வேவை தயார் செய்யும் பொறுப்பை சி.எஸ்.கே நிர்வாகம் கையில் எடுத்துக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவரது காயத்தை குணப்படுத்தி மீண்டும் போட்டிகளில் பங்கேற்கும் அளவுக்கு உடற்தகுதியை மீட்க பயிற்சி அளிக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவலை அறிந்த சிஎஸ்கே ரசிகர்கள் நெகிழ்ந்து போய் உள்ளனர்.

## நன்றி தெரிவித்த ஜெய்ஸ்வால்

ஜெய்ஸ்வால் அளித்த பேட்டியில் கூறியதாவது, இன்று ஆரம்பம் முதலே நான் மகிழ்ச்சியுடன் விளையாடினேன். பந்தை சரியாக பார்த்து என்னுடைய ஷாட்டுகளை அடிப்பதில் உறுதியாக இருந்தேன். இதுவரை என்ன செய்தேனோ அதை தொடர்ந்து செய்ய முயற்சிக்கிறேன். அதை தவிர்த்து என்னுடைய மனதில் வேறு ஒன்றுமில்லை.

கடினமான நேரத்தில் என்னை வழி நடத்திய விதத்திற்காக என்னுடைய சீனியர்களுக்கு உண்மையாக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக சங்கா சார், சஞ்சு பாய் ஆகியோர் எனக்கு தொடர்ந்து வாய்ப்புகள் கொடுத்தனர். அதை பயன்படுத்தி வலைப்பயிற்சியிலும் களத்திலும் என்னுடைய சிறந்த செயல்பாடுகளை கொடுக்க முயற்சித்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

## திட்டம் குறித்து சந்தீப் சர்மா

மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக பந்துவீசிய ராஜஸ்தான் வீரர் சந்தீப் சர்மாவுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. இதையடுத்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, நேற்று முன் தினம் தான் பிட்டானேன். பிட்டான பின் விளையாடிய முதல் போட்டி நல்ல உணர்வை கொடுக்கிறது. பிட்ச் கொஞ்சம் மெதுவாக இருந்தது. எனவே தொடர்ந்து வேரியஷன்களை மாற்றி கட்டர்களை வீசுவோம் என்பதே என்னுடைய திட்டமாகும்.

கடைசிக்கட்ட ஓவர்களில் நீங்கள் பந்து வீசுகிறீர்கள் என்றால் உங்களுக்கு பெரிய மனம் வேண்டும். ஐ.பி.எல் தொடரில் பல வீரர்கள் அந்த நேரத்தில் அழுத்தத்தை சந்தித்ததை பார்த்துள்ளேன். எனவே அங்கே அசத்துவதற்கு நீங்கள் பெரிய மனதுடன் திட்டங்களை சரியாக செயல்படுத்த வேண்டும். கடந்த சில வருடங்களுக்கு முன் நான் விலை போகவில்லை என்பது உங்களுக்கு தெரியும். இப்போதும் நான் மாற்று வீரராக வந்துள்ளேன். எனவே ஒவ்வொரு போட்டியையும் போனஸ் போல மகிழ்ச்சியுடன் எதிர்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## பாண்ட்யா குறித்து அதிருப்தி

நடப்பு ஐ.பி.எல் தொடரில் பாண்ட்யா தலைமையில் ஆடி வரும் மும்பை அணி இதுவரை 8 லீக் ஆட்டங்களில் ஆடி 3 வெற்றி, 5 தோல்வி கண்டு புள்ளிப்பட்டியலில் 7வது இடத்தில் உள்ளது. ராஜஸ்தானுக்கு எதிரான 38-வது லீக் ஆட்டத்தில் மும்பை அணி பேட்டிங் செய்த போது இறுதிகட்டத்தில் அதிரடியாக ஆடி ரன்கள் சேர்க்காதது தோல்விக்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. ஹர்திக் பாண்ட்யா நல்ல பினிஷிங் கொடுக்கத் தவறியதால் கடைசியில் எக்ஸ்ட்ரா 20 ரன்களை எடுக்காதது மும்பையின் தோல்விக்கு முக்கிய காரணமானது என பல்வேறு தரப்பினர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் கடைசி நேரத்தில் அதிரடியாக விளையாடி பினிஷிங் செய்யும் திறமை பாண்ட்யாவிடம் குறைந்து விட்டதாக இந்திய முன்னாள் வீரர் இர்பான் பதான் விமர்சித்துள்ளார். ஹர்திக் பாண்டியாவின் அடிக்கும் திறமை கீழே சென்று கொண்டிருக்கிறது. பெரிய கண்ணோட்டத்தில் மிகப்பெரிய கவலைக்குரிய அம்சமாகும். வான்கடே மைதானத்தில் அவர் வித்தியாசமாக செயல்படுகிறார். ஆனால் சிறிய உதவி இல்லாத பிட்ச்கள் அவருக்கு கவலையாக உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் நலனுக்காக மத துவேச கருத்துகளை தவிர்க்க வேண்டும்
## அரசியல் தலைவர்களுக்கு இ.பி.எஸ். கோரிக்கை

**சென்னை, ஏப். 24-**

நாட்டின் நலனுக்காக மத துவேச கருத்துகளை தவிர்க்க வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 18-வது பாராளுமன்ற தேர்தல் தொடங்கியுள்ளது. மொத்தம் 7 கட்டங்களாக நடைபெறும் தேர்தலில் நாட்டில் உள்ள 21 மாநிலங்களில் 102 தொகுதிகளில் முதற்கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 19ம் தேதி நடந்து முடிந்துள்ளது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்துள்ளது.

இரண்டாம் கட்டமாக சில மாநிலங்களில் வருகிற 26ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது. மத்தியில் ஆளும் பாஜகவின் சார்பில் பிரதமர் மோடி உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல எதிர்கட்சிகள் சார்பில் ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடியின் பேச்சு சர்ச்சையாகியுள்ளது. இதற்கு அரசியல் கட்சிகள் பலரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

பிரதமர் மோடியின் பேச்சுக்கு நாடு முழுவதிலும் உள்ள பல அரசியல் தலைவர்கள் கடும் கண்டனங்கள் எழுப்பி உள்ளனர். இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

“பிரதமர் மோடி ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாரா வில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது, இஸ்லாமிய மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளார். இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாகும். வாக்கு வங்கி அரசியலுக்காக அரசியல் கட்சித் தலைவர்களும், நாட்டின் உயர் ஆட்சிப் பதவியில் உள்ள பிரமுகரும் இதுபோன்ற சர்ச்சைக்குரிய கருத்தை வெளிப்படுத்துவது இந்திய இறையாண்மைக்கு உகந்ததல்ல.

இஸ்லாமிய மக்களுடைய மனது புண்படும்படியே இதுபோன்ற கருத்துகளை தெரிவிப்பது ஏற்புடையதல்ல. அரசியல் கட்சித் தலைவர்களும், ஆட்சி அதிகாரத்தில் உயர் பதவியில் உள்ளவர்களும் இதுபோன்ற கருத்துகளைத் தவிர்ப்பது நாட்டின் நலனுக்கும், மத நல்லிணக்கத்திற்கும் நல்லது.

அரசியல் கட்சித் தலைவர்களின் இதுபோன்ற சர்ச்சை கருத்துகளால் சிறுபான்மையின மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும், மத உணர்வுகளைத் தூண்டும் விதமாகவும் அமைகிறது. தேர்தல் பிரச்சாரத்தின் கண்ணியம் தவறிய இதுபோன்ற மத துவேச கருத்துகளை யார் பேசினாலும் அது, இந்திய இறையாண்மைக்கு எதிரானதாகும். நாட்டின் நலனுக்காக இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுமன்னிப்பு கோரிய விளம்பரங்கள்
# பூதக்கண்ணாடியை வைத்து பார்க்கும் அளவுக்கு மிகவும் சிறிதாக உள்ளது
## பதஞ்சலி நிறுவனத்திற்கு சுப்ரீம் கோர்ட் கண்டனம்

**புதுடெல்லி, ஏப். 24-**

பொதுமன்னிப்பு கோரிய விளம்பரங்கள் பூதக்கண்ணாடியை வைத்து பார்க்கும் அளவுக்கு மிகவும் சிறிதாக உள்ளது என்று பதஞ்சலி நிறுவனத்திற்கு சுப்ரீம் கோர்ட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரபல யோகா குரு பாபா ராம்தேவின் ‘பதஞ்சலி’ நிறுவனம் ஆயுர்வேத பல்பொடி, சோப்பு, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. கடந்த மாதம் ‘பதஞ்சலி’ நிறுவனம் மீது தவறான விளம்பரங்கள் வெளியிடுவதாக கூறி வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் பதஞ்சலி விளம்பரங்களில் தவறான தகவல்களை வெளியிடக்கூடாது என்று எச்சரித்த சுப்ரீம் கோர்ட், பதிலளிக்க கோரி அந்நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து நோட்டீசுக்கு பதிலளிக்காததால், அந்நிறுவனத்தின் இணை நிறுவனர் பாபா ராம்தேவை நேரில் ஆஜராக சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

வழக்கு தொடர்பாக ஏற்கனவே பிரமாண பத்திரம் தாக்கல் செய்த நிலையில் யோகா குரு ராம்தேவ் கடந்த 2-ம் தேதி சுப்ரீம் கோர்ட்டில் நேரில் ஆஜரானார். அப்போது, பிரமாண பத்திரம் திருப்தி அளிக்கவில்லை என நீதிபதிகள் அதிருப்தியை தெரிவித்தனர். ராம்தேவ் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இருவரும் தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தில் மன்னிப்பு கேட்க தயாராக உள்ளனர். நீதிமன்றம் என்ன சொன்னாலும் அதை செய்ய தயாராக இருக்கிறோம் என்றார். மன்னிப்பு என்ற பெயரில் எதையாவது எழுதி கொடுத்துவிட்டு தப்பித்து விடலாம் என நினைக்காதீர்கள் என பாபா ராம்தேவ் தரப்புக்கு நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

மேலும், நீங்கள் செய்திருப்பது மிக தீவிரமான நீதிமன்ற அவமதிப்பு செயல், மன்னிப்பு என்ற பெயரில் எதையாவது எழுதிக் கொடுத்துவிட்டு தப்பிக்க முடியாது என்று நீதிபதிகள் காட்டத்துடன் தெரிவித்தனர். அத்துடன், புதிய பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்ய இருவருக்கும் ஒரு வாரம் அவகாசம் அளித்த நீதிபதிகள், வழக்கின் விசாரணையை தள்ளிவைத்தனர்.

இதனை தொடர்ந்து இந்த வழக்கின் விசாரணை கடந்த 16ம் தேதி மீண்டும் நடைபெற்றது. அப்போது எங்களுடைய கருத்துகள், செய்த தவறுக்காக நிபந்தனையற்ற மன்னிப்பை ஏற்க வேண்டும் என்று பாபா ராம்தேவ், ஆச்சார்யா பாலகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்தனர். அப்போது குறுக்கீட்ட நீதிபதிகள் மற்ற மருந்து முறைகளை இழிவுபடுத்த அதிகாரம் வழங்கியது யார்?; நிரூபணமற்ற அலோபதி மருந்து விளம்பரங்களை எங்காவது பார்த்துள்ளீர்களா? என்று கேள்வி எழுப்பினர். தொடர்ந்து விளம்பரங்களை வெளியிடுவதில் மாற்றங்கள் செய்வதாக பதஞ்சலி தரப்பில் உத்தரவாதம் அளித்த நிலையில், பதஞ்சலி நிறுவனர் பாபா ராம்தேவ் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆச்சார்யா பாலகிருஷ்ணன் ஆகியோர் பொது மன்னிப்பு கோர உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஏப்ரல் 23ம் தேதிக்கு (அதாவது நேற்று) ஒத்திவைத்தனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு பாபா ராம்தேவ் பொது மன்னிப்புக் கோரினார். இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணை நேற்று நடைபெற்றது. அப்போது நாளிதழ்களில் வெளியிடப்பட்ட பொதுமன்னிப்பு கோரும் விளம்பர நகலை பதஞ்சலி நிறுவன வழக்கறிஞர் தாக்கல் செய்தார். அதனை பார்த்த நீதிபதிகள் மன்னிப்பு கோரும் விளம்பரங்கள் பூதக் கண்ணாடியை வைத்து பார்க்கும் அளவுக்கு சிறிதாக உள்ளது என்றும் பதஞ்சலி நிறுவனத்தின் விளம்பரங்களை இது போன்ற சிறிய அளவில் தான் வெளியிடுவீர்களா? என்று கேள்வி எழுப்பினர். பொருளை விளம்பரப்படுத்துவது போல, மன்னிப்பும் மிகப்பெரிய அளவில் புதிய விளம்பரமாக வெளியிட்டு அதை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் இந்த வழக்கு விசாரணையை ஏப்ரல் 30ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# க்யூட், நெட் தேர்வு மதிப்பெண் சமநிலைப்படுத்துதல் இருக்காது
## யு.ஜி.சி. தலைவர் ஜகதீஷ் குமார் தகவல்

**புதுடெல்லி, ஏப். 24-**

க்யூட், நெட் தேர்வுகளில் ஒவ்வொரு பிரிவிலும் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் சமநிலைப்படுத்தும் நடைமுறை இனி இருக்காது’ என்று பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.) தலைவர் ஜகதீஷ் குமார் தெரிவித்தார்.

இந்த தேர்வுகளில் ஒரே தாளுக்கு பல்வேறு தவணைகளில் தேர்வு நடத்தப்பட்டு வந்ததால், ஒவ்வொரு தவணையிலும் அந்தத் தாளில் தேர்வெழுதிய மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் சமநிலைப்படுத்தப்பட்ட பின்னரே வெளியிடப்படும். தேர்வில் மாணவர் பெற்ற மதிப்பெண் அப்படியே வெளியிடப்படாது. இந்த நடைமுறை மீது பல்வேறு தரப்பினரிடமிருந்து ஆட்சேபமும், கவலையும் தெரிவிக்கப்பட்டது. தேர்வில் உண்மையாக பெற்ற மதிப்பெண் மற்ற மாணவர்களின் மதிப்பெண்ணுடன் சமநிலைப்படுத்தும் போது குறைக்கப்படுவதாக மாணவர்கள் புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்த நடைமுறையை மாற்றும் வகையில், ஒவ்வொரு தாளுக்கும் பல்வேறு தவணைகளில் தேர்வு நடத்தப்பட்டதைக் கைவிட்டு, ஒரு தாளுக்கு ஒரே தவணையில் தேர்வு நடத்த யு.ஜி.சி. முடிவு செய்துள்ளது. இதுகுறித்து யு.ஜி.சி. தலைவர் ஜகதீஷ் குமார் கூறியதாவது:

“மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை கலை-அறிவியல் பட்டப் படிப்பு சேர்க்கைக்கான ‘க்யூட்’ தேர்வில் முன்னர் ஒரு தாளுக்கு பல்வேறு நாட்களில் தேர்வு நடத்தப்படும். இந்த நடைமுறை தற்போது கைவிடப்பட்டு, ஒ ரு தாளுக்கு ஒரே நாளில் ஒரே தவணையில் தேர்வை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென தேர்வு மையங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், மதிப்பெண்கள் சமநிலைப்படுத்த வேண்டிய அவசியமின்றி, மாணவர்கள் பெற்ற மதிப்பெண் அப்படியே வெளியிடப்படும். அதுபோல, பல்கலைக்கழக மற்றும் கல்லூரி உதவிப் பேராசிரியர் பணியிடத்துக்கு தகுதி பெறுவதற்கும், மத்திய அரசின் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகையைப் பெறுவதற்குமான ‘நெட்’ தேர்வு முன்னர் கணினி அடிப்படையிலான தேர்வாக நடத்தப்பட்டது. தற்போது ,வரும் ஜூன் 16-ஆம் தேதி நடைபெற உள்ள நெட தேர்வானது நேரடி எழுத்துத் தேர்வு முறைப்படி நடைபெற உள்ளது. எனவே, இந்தத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களும் சமநிலைப்படுத்த வேண்டிய அவசியமின்றி, அப்படியே வெளியிடப்படும்” இவ்வாறு யு.ஜி.சி. தலைவர் ஜகதீஷ் குமார் தெரிவித்தார்.



மதுரை சித்திரை திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நேற்று காலை நடைபெற்றது. அப்போது லட்சக்கணக்கான பக்தர்கள் ஆற்றில் கூடி கோவிந்தா, கோபாலா என்று முழக்கமிட்டு அழகரை பய பக்தியுடன் தரிசனம் செய்தனர்.

பாராளுமன்ற தேர்தலின்

# 2-ம் கட்ட வாக்குப்பதிவு நாளில் நாட்டில் வெப்ப அலை நிலவாது

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

புதுடெல்லி, ஏப். 24-

பாராளுமன்ற மக்களவைத் தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு ஏப். 26-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அந்நாளில் பெரிய அளவில் வெப்ப அலை நிலவாது என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "நாட்டின் சில பகுதிகளில் இயல்பான வெப்பநிலை மற்றும் வெப்ப அலைகள் பற்றிய அறிக்கைகளை கருத்தில் கொண்டு, வானிலை சூழலை அறிந்து கொள்வதற்கும், பொதுத் தேர்தல் காலத்தில் வெப்பமான வானிலை காரணமாக ஏற்படும் எந்தவொரு ஆபத்தையும் தணிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒரு கூட்டத்தை தேர்தல் ஆணையம் திங்கள்கிழமை நடத்தியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர்கள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சந்து ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் துறைத் தலைவர், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய தேர்தல் ஆணையம், இந்திய வானிலை ஆய்வு மையம் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அதிகாரிகள் ஆகியோர் ஒவ்வொரு வாக்குப்பதிவு கட்டத்துக்கும் ஐந்து நாட்களுக்கு முன்பு, வெப்ப அலை மற்றும் ஈரப்பதத்தின் தாக்கத்தை தணிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யும்.

மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்டமாக ஏப்ரல் 26-ம் தேதி நடைபெறவுள்ள வாக்குப்பதிவின் போது பெரிய அளவில் வெப்ப அலை நிலவாது என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார். 2-ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வானிலை நிலவரம் இயல்பாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் வெப்ப அலை சூழல் ஏற்பட்டால் அதை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு மாநிலங்களில் உள்ள சுகாதார துறையினருக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குமாறும், விரிவான உதவியை அளிக்குமாறும் தேர்தல் ஆணையம் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆந்திர முதல்வரின் சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா?

ஐதராபாத், ஏப். 24-

ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியின் சொத்து மதிப்பு ரூ.529.50 கோடி என வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு பதிவு 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. பதிவான வாக்குகள் ஜூன் 4-ம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இந்நிலையில், மக்களவைத் தேர்தலுடன் ஆந்திரத்தில் சட்டப் பேரவைத் தேர்தலும் நடைபெறவுள்ளது.

ஆந்திர முதலமைச்சரும், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜெகன்மோகன் ரெட்டி அம்மாநிலத்தில் உள்ள புலிவந்துலா தொகுதியில் போட்டியிடவுள்ளார். இதையடுத்து அவரின் சார்பில் கட்சி நிர்வாகிகள் தேர்தல் ஆணையத்தில் நேற்று முன்தினம் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

அதில், ஜெகன்மோகன் ரெட்டியின் சொத்து மதிப்பு ரூ.529.50 கோடி என்றும் கடந்த 5 ஆண்டுகளில் அவரின் சொத்து மதிப்பு 41 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. 2022-23 ஆண்டில் அவரது வருமானம் ரூ.50 கோடி எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அவரின் மனைவி பாரதி ரெட்டியின் மொத்த சொத்து மதிப்பு ரூ.176.30 கோடி எனவும் அவரிடம் ரூ.5.30 கோடி மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர நகைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்கு சரஸ்வதி சிமெண்ட்ஸ் மற்றும் சந்தூர் பவர்ஸ் ஆகிய நிறுவனங்களில் பங்குகள் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஜெகன்மோகன் ரெட்டி முதலமைச்சராகும் முன்பு அவர் மீது அமலாக்கத் துறை மற்றும் சிபிஐயால் 26 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையான வழக்குகளை சிபிஐ பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பச்சைப் பட்டு உடுத்தி...(1-ம் பக்க தொடர்ச்சி)

கருப்பசாமி வேடமணிந்த பக்தர்கள் கள்ளழகர் மீது தோல்பை துருத்தி மூலம் தண்ணீர் பீய்ச்சினர். பின்னர் மண்டகப்படியை மூன்றுமுறை வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அங்கு வையாழி ஆகி பின்னர் சந்திப்பு மண்டபத்தில் எழுந்தருளி வீரராகவப் பெருமாளுக்கு முதல் மரியாதையாக மாலை சாற்றினார்.

பின்னர் இந்துசமய அறநிலையத்துறை மண்டகப்படியில் எழுந்தருளினார். இவ்விழாவில் அமைச்சர் பி.மூர்த்தி, ஆட்சியர் எம்.எஸ். சங்கீதா, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், முன்னாள் அமைச்சர் ஆர்பி.உதயகுமார், நடிகர் சூரி, மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பலர் பங்கேற்றனர். பின்னர் பக்தர்கள் வைகை ஆற்றில் முடிக்காணிக்கை செய்தனர்.

பின்பு வைகை ஆற்றிலிருந்து காலை 7.35 மணியளவில் வைகை ஆற்றிலிருந்து புறப்பட்டு ஆழ்வார்புரம் வழியாக ராமராயர் மண்டபம் செல்லும் கள்ளழகர் மீது பக்தர்கள் தண்ணீர் பீய்ச்சி அடித்தனர். பின்னர் அண்ணாநகர் வழியாக வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் நேற்று இரவு எழுந்தருளல் நடைபெற்றது.

இன்று (ஏப்.24) வண்டியூர் வைகை ஆற்றிலுள்ள தேனூர் மண்டபத்தில் மண்டூக முனிவருக்கு மோட்சம் அளிக்கிறார். இன்றிரவு ராமராயர் மண்டபத்தில் தசாவதாரம் நடைபெறும். ஏப்.25-ல் பூப்பல்லக்கில் எழுந்தருள்கிறார். ஏப்.26-ல் கள்ளழகர் அழகர்மலைக்குப் புறப்படுகிறார். ஏப்.27-ல் காலை 10.32 மணிக்கு மேல் 11 மணிக்குள் இருப்பிடம் வந்து சேருகிறார். ஏப்.28-ல் உற்சவ சாற்றுமுறையுடன் திருவிழா நிறைவு பெறுகிறது.

விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழுத்தலைவர் வெங்கடாசலம், கோயில் துணை ஆணையர் லெ.கலைவாணன் மற்றும் அறங்காவலர்கள் செய்து வருகின்றனர். மாநகர காவல் ஆணையர் ஜெ.லோகநாதன் தலைமையில் 7000 போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



சித்திரை முழு நிலவு நாளான நேற்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள தமிழர் பண்பாட்டு சின்னமாக திகழ்ந்து வரும் கண்ணகியின் திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்ப்புத்துறை இயக்குநர் வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அருள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



உலகப் பிரசித்தி பெற்ற மதுரை சித்திரை திருவிழாவை முன்னிட்டு, வைகை ஆற்றில் எழுந்தருளிய கள்ளழகரை தரிசிக்க வந்த பக்தர்களுக்கு மதுரை செல்லூர் பாலம் ஸ்டேசன் ரோட்டில் ஆர்.ஜெ.தமிழ்மணி கல்வி அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற மாபெரும் அன்னதானத்தை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்து வழங்கினார். அருகில் அறக்கட்டளை நிறுவனர் ஜெயந்திராஜூ, டிரஸ்டிகள் சௌமியா விஜயகுமார், ரம்யா கணேஷ்பிரபு, கணேஷ்பிரபு மற்றும், ஜெயசீலன், விஷ்ணுசாகர், விபின்சாகர், வருண்சாகர் உள்ளிட்ட அ.தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தை முன்னிட்டு நேற்று அன்னதானம் நடைபெற்றது. முன்னதாக இந்த அன்னதானத்தின் பொருட்டு முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தனது குடும்பத்தினருடன் காய்கறிகளை நறுக்கிய காட்சி.